பக்கங்கள் : பதினான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 16 வெள்ளிக்கிழமை (01-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:246

## அமெ., ஜேர்மனி, இத்தாலி தூதுவர்களுடன் ஹக்கீம் தலைமையில் மு.கா.குழு சந்திப்பு

கொழும்பு,ஓக.1

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் பலரைச் சந்தித்தது.

அமெரிக்கா, ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் தூதுவர்களை முதற் கட்டமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினமிரவு கொழும்பு ஹோட்டல் ஒப்ரோயில் சந்தித்தனர்.

இலங்கை வாழ் முஸ்லிம்களின் பிரச்சினைகளை, குறிப்பாக வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகம் அறிந்திருக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இச்சந்திப்பை மேற்கொண்டதாக முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒருபோதும் முட்டுக்கட்டையாக முஸ்லிம் காங்கிரஸ் செயற்படாது என்று இச்சந்திப்பின் போது அமைச்சர் ரவூப

(14ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக இறுதி வரைவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்

## பிரதமர் ரணில் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.1

வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு இறுதி வரைவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றிய வரைவு புலிகளுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டவாறு அந்த வரைவு ஏன் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வினவியிருக்கிறார். அப்பொழுதே பிரதமர் இதைக் கூறினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவு இறுதியானதல்ல. அதனால் அதைப் புலிகளுக்கு அனுப்புவதற்கு முன்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவில்லை என்று பிரதமர் ரணிலும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் ஜனாதிபதிக்கு விளக்கமளித்தனர்.

அரசு, புலிகளுக்கு அனுப்பியிருக்கும் வரைவின் அடிப்படையிலேயே இரு தரப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் நடைபெறும் எனவும், இறுதித் தீர்வாக அமையும் வரைவு புலிகளுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# குரங்குபாஞ்சான் முகாமுக்கு செல்கிறார் தமிழ்ச்செல்வன்

## இன்று ஹெலியில் திருமலைக்குப் புறப்பாடு அங்கும் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்

கொழும்பு,ஓகஸ்ட் 1

**விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இன்று திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்கிறார். இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவு குறித்து அவர் திருகோணமலை மாவட்ட புலிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடுவார். பிரச்சினைக்குரிய கிண்ணியா, மணிராசன்குளம், குரங்குபாஞ்சான் முகாமையும் அவர் சென்று பார்வையிடுவார்.**

கடந்த ஞாயிறு முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்கியிருந்து பல்வேறு சந்திப்புக்களை மேற்கொண்டு வரும் தமிழ்ச்செல்வன் விமானப்படையின் விஷேட ஹெலிகொப்டர் மூலம் இன்று காலை திருகோணமலைக்குச் செல்வார்.

திருகோணமலை மாவட்டத்தில் அவர் மூன்று தினங்கள் தங்கியிருப்பார். புலிகளின் திருமலை மாவட்ட இராணுவத் தளபதி கேணல் பதுமன், அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக் ஆகியோரையும் சந்தித்து அவர் உரையாடுவார்.

அரசு அனுப்பியிருக்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவு, மாவட்ட அரசியல் நிலைமைகள் குறித்து அவர் விரிவாக ஆராய்வார் எனத் தெரிகிறது.

இந்த முகாம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டிருப்பதாகவும், அது அகற்றப்பட வேண்டும் எனவும் போர்நிறுத்தக் கண்காணிப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சு எதிரே நேற்று ஆர்ப்பாட்டம்:

# ஆசிரியசங்க உறுப்பினர் மீது கண்ணீர்ப்புகை பிரயோகம்!

கொழும்பு,ஓக.1

பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சு எதிரே நேற்று முற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரிய சேவைச்சங்க (குரு சேவா சங்கம்) உறுப்பினர்கள் பொலீஸாரினால் கண்ணீர்ப்புகை பிரயோகித்துக் கலைக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தண்ணீரும் பாய்ச்சி அடிக்கப்பட்டது.

கண்ணீர்ப்புகை பிரயோகத்தினால் ஒரு பௌத்த பிக்கு உட்பட ஐந்து ஆசிரியர்கள் காயமடைந்தனர். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர்களில் மூவர் சிகிச்சையின் பின் வெளியேறினர்.

சம்பள உயர்வு, பதவிஉயர்வு, சம்பள நிலுவை வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆசிரிய சேவைச் சங்கம் ஊர்வலத்தையும் ஆர்ப்பாட்டத்தையும் நேற்று நடத்தியது.

ஊர்வலமாக வந்த ஆசிரியர்கள், கல்வி அமைச்சருக்கு மகஜர் ஒன்றைக் கையளிக்க வேண்டும் எனக் கூறி, பொலீஸ் தடையையும் மீறி அமைச்சை நோக்கி முன்னேறியுள்ளனர்.

இதனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகையைப் பிரயோகித்துக் கலைத்ததாக தலங்கம பொலீஸார் தெரிவித்தனர்.

இதனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்வி அமைச்சின் எதிரே வீதியில் எதிர்ப்புக் கூட்டமொன்றை நடத்தினர். கூட்டத்தின் இறுதியில், கல்வி அமைச்சரிடம் கையளிக்கக் கொண்டு வந்த மகஜரை எரித்து விட்டு அவர்கள் கலைந்து சென்றனர்.

(ம)

## கைதான புலிகள் உறுப்பினர்களின் விளக்கமறியல் காலம் நீடிப்பு

மட்டக்களப்பு,ஓக.1

மட்டக்களப்பில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட புலிகள் உறுப்பினர்கள் எட்டுப் பேரினதும் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தற்போது மட்டக்களப்பு சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 4 பெண்போராளிகள் உட்பட புலி உறுப்பினர்களதும் விளக்கமறியல் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

## ஹெலி வசதியை உடன் வாபஸ் பெறுக! சு.கட்சி கோரிக்கை

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு அரசு வழங்கியுள்ள ஹெலி வசதிகளை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கோரியுள்ளது.

சு.ப.தமிழச்செல்வன் வன்னியில் இருந்து கிழக்கு மாகாணத்துக்கு விஜ

(14ஆம் பக்கம் பார்க்க)

# நெடுந்தீவில் கடற்படையினர் புதிய முகாம் அமைக்கலாம்; குரங்குபாஞ்சானில் புலிகள் முகாம் இருப்பது குற்றமா?

## சீற்றத்துடன் கேட்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்


நெடுந்தீவில் கடற்படையினர் புதிய முகாம் அமைத்தபோது, அதை அகற்றக் கண்காணிப்புக் குழுவினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், எமது கட்டுப்பாட்டுப் பகுதியான குரங்குபாஞ்சானில் எமது முகாம அமைந்திருப்பதை மட்டும் கண்காணிப்புக் குழு அகற்ற முயல்கிறது. அது எப்படி நியாயமாகும்? எமது பகுதியில் எமது முகாம் அமைந்திருப்பதை எவரும் தடுக்கமுடியாது.

- இப்படிக் கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்களை நேற்று முன்தினமிரவு சந்தித்தபோதே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு கூறினார்.

நட்பு முறையில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது:-

எமது கட்டுப்பாட்டுப் பகுதியான குரங்குபாஞ்சான் பகுதியில் எமது முகாமைத் தொடர்ந்து வைத்திருப்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அந்த முடிவில் எந்தவித மாற்றத்துக்கும் இடமில்லை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் - நெடுந்தீவில்



கிழக்குக்கு விஜயம் செய்த சு.ப.தமிழ்ச்செல்வன் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் உள்ளூர் செய்தியாளர்களிடம் உரையாடினார். அவருடன் மட்டு. அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் கருணாவும் கலந்துகொண்டார்.

- கடற்படையினர் புதிதாக முகாம் அமைத்தபோது, அதை நாம் எதிர்த்தோம்; கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்தோம். ஆனால், அந்த முகாமை அகற்ற கண்காணிப்புக் குழு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இன்று எமது பகுதியில் அமைந்துள்ள முகாமை அகற்றும்படி கண்காணிப்புக்குழு எப்படிக் கேட்க முடியும்? எமது பகுதியில் எமது முகாம் அமைந்திருப்பதை எவரும் தடுக்க முடியாது.

இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளுக்கு வழங்கவேண்டும் என்று சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. இதனாலேயே, இடைக்கால நிர்வாக சபை தொடர்பான வரைவு ஒன்றை இலங்கை அரசு எமக்கு அனுப்பியுள்ளது. 'பயங்கரவாதிகள்' என எம்மை

(14ஆம் பக்கம் பார்க்க)

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



NSB
உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

- தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
- இரகசியப் பேணல் மற்றும் துரித சேவை
- தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
- வருடாந்தம் 17% குறைந்த வட்டி
- கணனி மூலம் பரிசோதனை

NSB
தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

# உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றி ஜேர்மனிய தூதரக அதிகாரி ஆய்வு

யாழ்ப்பாணம்,ஓக.1

குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்கள் காரணமாக மக்கள் மீள்குடியமர்வு பாதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து நேரடி ஆய்வு ஒன்றை ஜேர்மன் தூதரக இரண்டாவது செயலர் கைடோ ஸ்கிறோடர் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்த அவர் அதிபாதுகாப்பு வலயங்கள் மற்றும் மக்கள் மீள்குடியமர்வு ஆகியன தொடர்பாக படை அதிகாரிகளுடனும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடியுள்ளார்.

பல இடங்களில் உள்ள அகதி முகாம்களுக்குச் சென்று அங்கு தங்கியுள்ளவர்களுடனும் கலந்துரையாடி



அவர்களின் வாழ்க்கை நிலையை அவர் கேட்டறிந்தார்.

குடாநாட்டு நிலைமை, அதிபாதுகாப்பு வலயங்களால் மக்களின் மீள குடியமர்வில் ஏற்பட்டுள்ள தாக்கம், மக்களின் அன்றாட வாழ்க்கைநிலை ஆகியன தொடர்பான நேரடி அறிக்கை ஒன்றை அவர் ஜேர்மன் அரசுக்கு சமர்ப்பிக்கவிருக்கின்றார்.

ஜேர்மனியில் அடைக்கலம் கோரியுள்ள இலங்கையர்களின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு வருகின்றன என்றும் -

விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் 20பேர் வீதம் மாதாந்தம் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டு வருகின்றனர் என்றும் - அவர் மேலும் கூறினார். (ஓ-3)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.1

நூலகமும் தகவல் விஞ்ஞானமும டிப்ளோமா கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை நூலகச் சங்கத்தினால் நடத்தப்படும் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்களும் கல்விச் சான்றிதழ்களுடன் பரீட்சைக்கு சமுகமளிக்கலாம் என பல்கலைக் கழக நூலகர் கேட்டுள்ளார். (ம)

# 7 வருடங்களின் பின்னர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை இன்றுமுதல் மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஓக.1

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நிரந்தர வைத்தியரின் சேவையுடன் இன்று மீண்டும் இயங்க ஆரம்பிக்கின்றது.

1996 ஆம் ஆண்டுக்குப்பின் இயங்காமல் இருந்த இந்த வைத்தியசாலையை மீண்டும் இயக்குவதென வைத்தியசாலை பணிப்பாளர் சபை எடுத்த முடிவுக்கு அமைய இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், பிரிட்டிஷ் தூதரகம், நெதர்லாந்து தூதரகம் ஆகியவற்றின் உதவியுடன் ஆஸ்பத்திரி புனரமைக்கப்பட்டது.

சத்திரசிகிச்சை களம், மகப்பேற்று நிலையம் ஆகியனவும் செயற்படவிருக்கின்றன. (ம-3)

# குடாநாட்டின் சில பகுதிகளில் நாளை மின்சாரம் தடைப்படும்

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் தடைப்படுமென மின்சார சபை அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதி முழுவதும், கோண்டாவில் கிழக்கு மற்றும் யாழ்.பல்கலைக்கழகப் பகுதிகளிலும் -

ஊரெழு, உரும்பிராய், கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளிலும் -

புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி மற்றும் வடமராட்சிப் பகுதிகளிலும -

மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே திருத்த வேலைகள் முடிவுற்றால் உடனடியாக மின்விநியோகம் இடம்பெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ம-9)

# யாழ். நகரப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்.நகரப் பகுதியில் கடந்த சில நாள்களாக சைக்கிள் திருட்டு அதிகரித்துள்ளதாக யாழ்.பொலீஸ் நிலைய குற்றவியல் பிரிவுப் பொலீஸார் தெரிவித்தனர்.

வங்கிகள் மற்றும் கடைகள் முன பாகவும் பொது இடங்களிலும் சைக்கிள்களை நிறுத்தி அவற்றைப் பூட்டிவிட்டுச் செல்லும் போதும் கம்பிகளைக கொண்டு தந்திரமாகப் பூட்டினைத் திறக்கும் திருடர்கள் சைக்கிள்களை களவாடிச் சென்று விடுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய சைக்கிள் திருட்டு தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு தினமும் முறைப்பாடு கிடைத்து வருகின்றது.

எனவே, பொதுமக்கள் தமது சைக்கிள்களைச் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் விடுவது சிறந்தது என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்பு யாழ்நகரப்பகுதியில் திருடப்பட்ட சைக்கிள்களின் ஒரு தொகுதி யாழ்.பொலீஸாரால் மீட்கப்பட்டு யாழ். பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சைக்கிள்களின் உரிமையாளர்கள் வந்து இன்றுவரை அவற்றைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று பொலீஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

சைக்கிள்களை உரியவர்கள் வந்து பெறாத பட்சத்தில் அவை யாழ்.நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளன சீன்றும் அவர் கூறினார்.

# ஜப்பானிய துணை அமைச்சர் ஞாயிறன்று யாழ். வருவார்

யாழ்ப்பாணம்,ஓக.1

ஜப்பானிய வெளிவிவகாரத்துறை சிரேஷ்ட துணை அமைச்சர் ரிச்சிரோ ஜானோ நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

அன்று காலையே கொழும்பு வரும் இவர் உடனடியாகவே யாழ். குடாநாட்டுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

பொதுமக்களின் மீள்குடியமர்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை நேரில் சென்று பார்வையிடவுள்ள அமைச்சர், இடம்பெயர்ந்தோர் வாழும நலன்புரி முகாம்களுக்கும் விஜயம் செய்து அவர்களது பிரச்சினைகளையும் கேட்டறிவார்.

இதன் பின்னர் கொழும்பு திரும்பும் அவர் நீர் விநியோகத்திட்டத்திற்கு உதவி வழங்கும் அரசுடனான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவார்.

தற்போதைய சமாதான முயற்சிகள் பற்றிய அரசுத் தலைவர்களுடன் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

# 'கறுப்பு ஜூலை' சம்பவங்களுக்கு அரசு பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்

## இதனை வலியுறுத்தி அறிக்கை தயாரிக்க மனிதநேய அமைப்புகள் முடிவு

யாழ்ப்பாணம்,ஓக1

'கறுப்பு ஜூலை' கொடுமைகளுக்கு இலங்கை அரசு பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையிலான அறிக்கையொன்றை யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் தற்போதைய அரசுக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பிவைக்கவுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஒன்றுகூடலில் இது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

'கறுப்பு ஜூலை குறித்த உண்மைக்காக ஆணைக்குழு' என்ற அமைப்பு சம்பவம் நடந்த சுமார் 20 வருடங்களின் பின்னர் தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

அந்த ஆணைக் குழுவிற்கு அனுப்பி வைப்பதற்காக 'கறுப்பு ஜூலை' போன்ற கொடுமைகள் இனிமேலும் இடம்பெறக்கூடாது என்பதனை வலியுறுத்தும் வகையில் அறிக்கை ஒன்றை தயாரிக்க மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் முடிவு செய்தது.

எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன் குறிப்பிட்ட அறிக்கையை தயாரிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனை பிரதமர், ஜனாதிபதி, அரசியல்கட்சித் தலைவர்கள், இந்திய மற்றும் அமெரிக்கத் தூதுவர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம-9)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ரூ.1லட்சத்து 30ஆயிரம் திருட்டு

வளலாய்,ஓக1

அச்சுவேலி ப.நோ.கூ.சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா நேற்றுக்காலையில் சமயோசிதமாகத் திருடப்பட்டுள்ளது.

வாகனத்துக்கு எரிபொருளை நிரப்புவதற்காக முகாமையாளர் தனது இருக்கையில் இருந்து எழுந்து சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது மேசையில் லாச்சிக்குள் இருந்த பணம் காணாமற் போயிருந்ததாகக் கூறப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வியாபாரத்தில் கிடைத்த பணத்தையும் தலைமை அலுவலகத்தில் செலுத்துவதற்காகக் கணக்குப் பார்த்து மேசை லாச்சிக்குள் வைத்துவிட்டு எரிபொருள் நிரப்ப முகாமையாளர் வெளியே சென்ற சமயமே பணம் சமயோசிதமாகத் திருடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வந்த லொறி ஒன்றில் வந்தவர்கள் அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்ததை அடுத்து அந்த வாகனத்தைத் தேடி முகமாலை வரை சென்ற முகாமையாளர் இது தொடர்பாக தமிழீழக் காவல் துறைப் பணிமனையிலும் முறைப்பாடு செய்துள்ளார். (ம-8-11-178-72)

# தீவுப் பகுதிகளுக்கு சென்று வருவோர் மீது அல்லைப்பிட்டியில் சோதனை அதிகரிப்பு

ஊர்காவற்றுறை,ஓக.1

தீவுப் பகுதிகளுக்குச் சென்று வருவோர் மீது அல்லைப்பிட்டியில் உள்ள சோதனைச் சாவடியில் கடந்த சில தினங்களாகக் கடற்படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துக் காணப்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

நிறுத்தப்பட்டிருந்த அடையாள அட்டைகள் பரிசோதிக்கும் நடவடிக்கையை ஓரிரு மாதங்களுக்கு முன்பு மீண்டும் ஆரம்பித்த கடற்படையினர் தற்பொழுது பயணிகளின் பொதிகளையும் சோதனையிட ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன் அடையாள அட்டைகள் இன்றிப் பயணிப்போரைத் துருவித் துருவி விசாரித்த பின்னரே தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினருடன் இணைந்து பொலீஸாரும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. (ம-10-16)

## இன்று ஆடிப்பூரம்

யாழ்ப்பாணம்,ஓக1

குடாநாட்டில் உள்ள அம்மன் ஆலயங்களில் இன்று ஆடிப்பூரத் திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதனையொட்டி அம்பாளுக்கு ருதுசோபன வைபவமும் விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன. (ம-10-17-72-173)

## யாழ். பல்கலைக்கு 51 பேர் அனுமதி

2002/2003 கல்வியாண்டுக்கென வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு 51 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 51 பேரில் பௌதீக விஞ்ஞானக் கற்கைநெறிக்கு 15 பேரும், உயிரியல் விஞ்ஞானக் கற்கை நெறிக்கு 22 பேரும், விவசாய விஞ்ஞானக் கற்கை நெறிக்கு 14 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர், விவரங்களை பீடாதிபதி அலுவலகங்களில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்பு தமது பதிவுகளை பல்கலைக்கழக பரீட்சைகளும் [illegible]

## வியாசனின் உலைக்களம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.1

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதை நூலான 'வியாசனின உலைக்களம்' வெளியீட்டு விழா இன்று மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஈகச்சுடரை மாவீரா பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றி வைப்பார். சிறப்பு



ரையை வே.பாலகுமாரனும், வெளியீட்டுரையை சி.கருணாகரனும், மதிப்பீட்டுரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஐ.சாந்தன், மு.திருநாவுக்கரசு ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் நூலை வெளியிட்டு வைக்க யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் சிறப்புப் பிரதிகளை வழங்குவார்.

கடந்த 12 வருடங்களாக விடுதலைப் புலிகள் ஏட்டில் உலைக்களம் என்ற தலைப்பில் 'வியாசன்' என்ற புனைபெயருடன் கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதி வந்த கவிதைகளின் [illegible] (ம-10)

# தென்மராட்சி தெற்கில் மேலும் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கைக்கு அனுமதி!

தென்மராட்சி,ஓக1

தென்மராட்சி தெற்கில் படையினர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பகுதியில் மேலும் சுமார் 1000 ஏக்கர் காணியில் இவ்வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரியிலிருந்து தனங்கிளப்பு சந்தி வரையான வீதியின் மேற்குப் புறமாகவும் தனங்கிளப்பு சந்தியிலிருந்து நாவற்குழி வரையான வீதியின் வடக்குப் புறமாகவும் இவ் வீதிகளிலிருந்து சுமார் 100 மீற்றருக்கு அப்பால் - மறவன்புலோ கிராம அலுவலர் பிரிவில் - ஆயிரம் ஏக்கர் வயல்களில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வயல்களுக்கு செல்வோர் நுணாவில் கொல்லங்கிராய் வீதியினைப் பயன்படுத்த முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுடைய நெல்வயல்களைக் கொண்ட இப்பகுதியில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே நெற்செய்கை பண்ண அனுமதிக்கப்பட்டமை குறித்து விவசாயிகள பலர் கவலை தெரிவித்தனர்.

தற்போது செய்கை பண்ண அனுமதிக்கப்பட்ட வயல் நிலங்களை ஊடறுத்து மண் அணைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும். வாய்க்கால்கள் பல மூடப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனால், கால போக செய்கையில் பல சிரமங்களை நெற் செய்கையாளர்கள் எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்படலாமென அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இப்பகுதியில் சுமார் 500 ஏக்கர் வயல்கள் நெற் செய்கைக்கு அனுமதிக்கப்பட்டன. இவ் வீதிகளில் இருந்து சுமார் 300 மீற்றருக்கு அப்பால் உள்ள பகுதிகளிலேயே நெற்செய்கைக்கு அப்போது அனுமதியளிக்கப்பட்டது. (ம-117-31)

# மட்டு. பட்டதாரிகளின் போராட்டம் முடிந்தது

மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகளின் போராட்டம் நேற்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதையடுத்து மட்டக்களப்பு கச்சேரி வழமை போல் இயங்கத் தொடங்கியது.

மட்டக்களப்பு மாவட்டப் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க பிரதமரிடமிருந்து உறுதி மொழி பெற்றுத் தருவதாக எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், ஞா.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் தெரிவித்ததை அடுத்து பட்டதாரிகளின் போராட்டம் கைவிடப்பட்டது.



தமிழகத்தின் பிரபல ஆலயமான திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்துக்கு நடிகர் ரஜனிகாந்த் முதன்முறையாக நேற்றுமுன்தினம் சென்றார். அவரை அர்ச்சகர்கள் வரவேற்ற போது எடுக்கப்பட்ட படம் இது.

# அல்-கெய்டா குறித்துத் தகவல் தர பெரும்பாலான நாடுகள் பின்னடிப்பு

## ஐ.நா. பாதுகாப்புச் சபைக் குழு வேதனை

நியூயோர்க்,ஓக.1

அல்-கெய்டா மற்றும் தலிபான்களின் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைத் தர பெரும்பாலான உறுப்பு நாடுகள் பின்னடிப்பதாக ஐ.நா.குழு வேதனை வெளியிட்டுள்ளது.

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின் லேடன் தலைமையிலான அல்-கெய்டா அமைப்பும், ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஆட்சியாளர்களான தலிபான்களும் தமது நாடுகளில் செயல்பட்டு வருகின்றனரா என்பது பற்றிய தகவல்களைத் தெரிவிக்குமாறு ஐ.நா. கேட்டிருந்தது.

ஆனால், ஐ.நா.வின் உறுப்பு நாடுகளில் 64 நாடுகள்தான் அத்தகவல்களைக் கொடுத்திருக்கின்றன. இன்னும் 127 நாடுகள் அத்தகவல்களை அளிக்கவில்லை என்று ஐ.நா.பாதுகாப்புச் சபையுடன் இணைந்தகுழு வேதனை தெரிவித்துள்ளது.

கென்யாவிலும், தான்சானியாவிலும் அமெரிக்கத் தூதரகங்கள் மீது, அல்-கெய்டா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து, அந்த அமைப்பின் மீதும் தலிபான் உள்ளிட்ட அதன் நேச அமைப்புக்கள் மீதும் தடைகள் விதிக்கப்பட்டன. இத்தடை ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க, ஐ.நாவுக்கான சிலி நாட்டுத் தூதர் ஹெரால்டோ முலோஸ் தலைமையில் ஐ.நா. துணைக்குழு அமைக்கப்பட்டது.

சவூதி அரேபியா, ரஷ்யாவின் செசன்யா, மொராக்கோ, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் தீவிரவாதச் சம்பவங்கள் நடந்துள்ளன. தீவிரவாதச் செயல்களை நிகழ்த்தக்கூடிய அளவுக்கு பலமுடையதாகவே அல்-கெய்டா அமைப்பு இருப்பது இதிலிருந்து தெரியவந்துள்ளது. எனவே, ஐ.நா, உறுப்பு நாடுகள் அலட்சியமாக இருக்கக் கூடாது என்று எச்சரித்துள்ளது அக்குழு.

தீவிரவாதச் செயல்களை நடத்தத் தேவையான ஆயுதங்களையும் வெடிபொருள்களையும் வாங்கக்கூடிய நிலைமையில் அல்-கெய்டா உள்ளதாக அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ)

# மேற்குக்கரைப் பகுதியின் கட்டுப்பாட்டை பலஸ்தீனத்துக்கு மாற்றும் பேச்சு தோல்வி

மேற்குக்கரை,ஓக.1

இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பிலுள்ள மேற்குக்கரைப் பகுதியின் கட்டுப்பாட்டை பலஸ்தீனர்களுக்கு மாற்றுவதற்காக நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துள்ளன. அத்துடன் ஜெரிக்கா, குவல்கில்யா ஆகிய பலஸ்தீனத்துக்குச் சொந்தமான இரண்டு பகுதிகளில் இருந்தும் இஸ்ரேலியப் படையினர் வாபஸ் பெறுவது குறித்து இதுவரை எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை.

பலஸ்தீன, இஸ்ரேலிய பிரதமர்கள் ஜனாதிபதி புஷ்ஷை அமெரிக்காவில் அடுத்தடுத்து சந்தித்த பின்னர் மேற்படி விடயம் பற்றிய பேச்சுக்கள் நேற்று முன்தினம் ஜெருசலேமில் நடைபெற்றன.

முதலில் பலஸ்தீன அதிபர் அரபாத்தின் மையமாக விளங்கும் ரமல்லாவை விட்டு வெளியேற விருப்பம் தெரிவித்த இஸ்ரேல் அதிகாரிகள் அதன் பின்னரே குவல்கில்யா மற்றும் நப்லஸ் பகுதிகளில் இருந்து வெளியேறுவோம் என்று பலஸ்தீன அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

ஆனால், இதற்கு பலஸ்தீனத் தரப்பு உடன்படவில்லை. அனைத்து இடங்களில் இருந்தும் இஸ்ரேலியப் படை வெளியேறவேண்டுமென்று அது வலியுறுத்தியுள்ளது.

சுமார் நான்கு மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்தப் பேச்சு எதுவித உடன்பாடும் இல்லாமல் முடிவடைந்தது.

அதேவேளை -

பலஸ்தீனர்கள் புதிதாக தாக்குதல்களைத் தொடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனால், இஸ்ரேல் அமைக்கும் பாதுகாப்பு தடுப்புச் சுவரே சிக்கல்களை ஏற்படுத்துகிறது என்று பலஸ்தீனப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஒ)



மேற்குக்கரையில் இடம்பெற்ற அரபாத் ஆதரவு ஊர்வலம்.

# மற்றொரு படைவீரர் ஈராக்கில் உயிரிழப்பு

ஈராக் தலைநகர் பக்தாத்தின் வடகிழக்குப் பகுதியில் நேற்று நடைபெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார்; மேலும் இருவர் காயமடைந்தனர்.

பக்தாத்திலிருந்து 40கி.மீ. தூரத்தில் நடைபெற்ற இத்தாக்குதல் சதாம் ஹுசைனின் சன்னி இன முஸ்லிம் மக்களால் மேற்கொள்ளப்பட்டது என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி புஷ் ஈராக் போர் முடிந்துவிட்டது என்று அறிவித்த பின்னர் இதுவரை 51 அமெரிக்க படையினர் அங்கு கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சதாமின் புதல்வர்கள் கொல்லப்பட்ட பின்னர் தம்மீதான தாக்குதல்கள் குறையும் என்று எதிர்பார்த்த அமெரிக்கப் படையினருக்கு இவ்வாறான சம்பவங்கள் ஏமாற்றத்தை அளித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் -

ஈராக்கில் புதிய அரசியல் சட்டம் நிறைவேறிய பின்னர் தேர்தல் நடத்தப்படும் என்று அங்கு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ள போல் பிரிமர் தெரிவித்துள்ளார். ஆனால், இதற்கு ஒருவருடத்திற்கு மேல் தேவை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் நடைபெறும் வெளியுறவு அமைச்சக கட்டட வேலைகளைப் பார்வையிட வந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது ஆட்சியைக் கவனிக்கும் இடைக்கால நிர்வாக சபை புதிய அரசு தேர்ந்தெடுக்கப்பட்டதும் செயலிழந்துவிடும்.

தற்போதுள்ள இடைக்கால சபைக்குத் தலைவரைத் தெரிவுசெய்வதற்காக ஒன்பது பேர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இப்ராகிம் அல்ஜா'ப்ரி முன்னிலையில் உள்ளார்.

# சூரியஒளியினால் அறுவைச்சிகிச்சை இஸ்ரேலில் வெற்றிகரமாக பரீட்சிப்பு!

டெல்அவிவ்,ஓக.1

சூரிய ஒளியைப் பயன்படுத்தி அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளலாம் என்பதை இஸ்ரேலிய டாக்டர்கள் நிரூபித்துள்ளனர்.

இதற்கான பரீட்சார்த்த முயற்சியாக எலிகள் மீது இத்தகைய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சூரிய வெளிச்சமுள்ள காலநிலைகளில் மட்டும் செய்யக்கூடிய இந்த சிகிச்சை, லேசர் சிகிச்சைக்கு மாற்றீடாகக் கூடியது என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

உடலில் உள்ள புற்றுநோய்க்கட்டிகளை அப்புறப்படுத்த இதுவரை லேசா முறை பயன்படுத்தப்பட்டு வந்தது. இனிவரும் காலங்களில் சூரியஒளி மூலம் அத்தகைய கட்டிகளை அகற்றி விடலாம்.

மிகவும் செறிவான சூரிய ஒளியை செலுத்தி இரத்தக்கட்டிகளை மிக வும் சிக்கனமாகவும் - இலகுவாகவும் செய்து கொள்ளலாம் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்முறையில், செறிவுடைய சூரிய வெளிச்சத்தை அறுவைச்சிகிச்சை கூடத்தினுள் 'வழியனுப்பி' ஒன்றின் மூலம் கொண்டு வந்த டாக்டர்கள், அதனை எலிகளின் ஈரலினுள் செலுத்தினர். அப்போது லேசர் சிகிச்சையால் ஏற்படுவதைப் போன்று ஈரலில் உள்ள இழையங்கள் கருகி இறந்தன. ஆனால், எலிகள் எதுவித பாதிப்பும் இன்றி உயிருடன் இருந்தன.

இந்தச் சிகிச்சை மருத்துவ உலகில் ஒரு சாதனையாக கருதப்படுகிறது.

# மசூதி இருந்த இடத்தில் ஆலயமா? பா.ஜ.கட்சிக்கு கருணாநிதி எச்சரிக்கை

பாபர் மசூதியை இடித்த இடத்தில் ராமர் கோயில் கட்டுவதை தி.மு.க. ஏற்காது; அதற்காக ஒரு சட்டத்தை கொண்டுவந்தால் அதை எதிர்ப்போம். கூட்டணியில் இருந்து கொண்டே எதிர்ப்பதை பா.ஜ.க ஏற்காவிட்டால், கூட்டணியில் இருந்து வெளியேறுவோம் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

இது பற்றி செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

ராமர் கோயில் கட்டுவதற்கும், பொது சிவில் சட்டம் கொண்டு வருவதற்கும் ஆதரவாகப் பேசியிருப்பதன் மூலம், பா.ஜ.க.வை நோக்கி ஜெயலலிதா செல்கிறாரா என்று கேட்கிறீர்கள். அவர் எங்கே போகிறார் என்றெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால், அவர் சொல்லி இருக்கிற கருத்துக்கள் எனக்கு ஏற்புடையதல்ல.

ஒன்றாக ஒற்றுமையாக இருப்பது என்பது வேறு; ஒரே மாதிரியாக இருப்பது வேறு. வேற்றுமையில் ஒற்றுமையாக இருக்கவேண்டியது அவசியம். எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றார் கருணாநிதி. (ஒ)

# 90 ஆயிரம் காகங்கள் சிங்கப்பூரில் சுடப்பட்டன

சிங்கப்பூர்,ஓக.1

சிங்கப்பூரில் காகங்களை அழித்தொழிக்கும் அரசின் திட்டத்தின்படி, இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து இதுவரை 90 ஆயிரம் காகங்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளன. 20 ஆண்டுகளில் அனைத்துக் காகங்களையும் ஒழித்துவிட சிங்கப்பூர் அரசு தீர்மானித்துள்ளது.

தேசிய சுற்றுச்சூழல் நிறுவன அதிகாரி மிக்கேல் டான் இதைத் தெரிவித்தார்.

இப்போது சிங்கப்பூரில் 30 ஆயிரம் காகங்கள் எஞ்சியுள்ளன. உணவுக் கழிவுகளைத் தேடித் தின்று திரியும் காகங்களால் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சிங்கப்பூரில் உள்ள வெளிப்புற உணவகங்களில் அவை கூடி தொல்லைகளை ஏற்படுத்துகின்றன. சிலவேளைகளில் மனிதர்களைத் தாககவும் செய்கின்றன.

எனவே, அவற்றை அழிக்க அரசு முடிவு செய்தது. அதற்கென குறிபார்த்துச் சுடக்கூடியவர்களைக் கொண்ட குழுக்களை சுற்றுச்சூழல் நிறுவனம் நியமித்துள்ளது. காகங்கள் மாலையில் கூடுகளுக்குச் செல்லும்போது, சுட்டு வீழ்த்தப்படுவது வழக்கம்.

# சிறுவர் கடத்தலை தடுத்து நிறுத்த பிரிட்டனில் நடவடிக்கை அவசியம்

## 'யுனிசெவ்' அமைப்பு வலியுறுத்து

லண்டன்,ஓக.1

வேறு நாடுகளிலிருந்து பிரிட்டனுக்குள் சிறுவர்கள் கடத்தி வரப்படுவதைத் தடுக்க பிரிட்டிஷ் குடிவரவுச் சட்டங்களில் உள்ள குறைபாடுகள் நீக்கப்படவேண்டும்.

இவ்வாறு சிறுவர்களுக்கான ஐநா. பாதுகாப்பு நிதியம் வெளியிட்ட அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

2001ஆம் ஆண்டு லண்டனின் தேம்ஸ்நதியில் நைஜீரியச் சிறுவன் ஒருவன் சடலமாகக் கிடந்த சம்பவம் தொடர்பாக தற்போது 21 பேர் கைது செய்யப்பட்டுள்ள சமயத்தில் வெளிவந்துள்ள ஐ.நா. அமைப்பின் இந்த அறிக்கை பிரிட்டனில் ஆய்வுக்குரிய விடயமாகியுள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பிரிட்டனுக்குள் கடத்தி வரப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பாலியல் வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

அத்துடன், போதைப்பொருள் கடத்தலுக்கும், பிச்சை எடுக்கவும், திருடவும் இச்சிறுவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். உள்ளூர்வாசிகள், கடத்தி வரப்படும் சிறுவர்களை வேலையாளகளாக உபயோகப்படுத்த ஆர்வம் காட்டுகின்றனர்.

மேற்காபிரிக்கா, கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளிலிருந்தே அதிகமான சிறுவர்கள் பிரிட்டனுக்குள் கடத்தி வரப்படுகின்றனர். உலகளாவிய ரீதியில் ஆளகடத்தல், வளர்ந்து வரும் வர்த்தக நடவடிக்கையாக உருவெடுத்துள்ளது. குறிப்பாக சிறுவர்கள் கடத்தப்படுவது அதிக லாபம் தரும் குற்றச் செயலாக உள்ளது. பிரிட்டிஷ் சட்டங்களில் உள்ள குறைபாடுகள் இதற்கு பெரிதும் உதவுகின்றன. ஆகவே, இதனை தவிர்க்கும் நடவடிக்கையில் பிரிட்டன் அதிக அக்கறை காட்டவேண்டும்.

வேலைதேட அல்லது கல்வியைத் தொடர பிரிட்டனில் வாழும் உறவினரிடமோ அல்லது நண்பர்களிடமோ தமது பிள்ளைகளை அனுப்புவது மேற்காபிரிக்க நாடுகளின் கலாசாரத்தின் ஒரு பகுதியாக மாறியுள்ளது.

இதனைப் பயன்படுத்தி சிறுவர்கள் பிரிட்டனுக்குள் கடத்தப்படுகின்றனர்.

பிரிட்டனில் சிறுவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் பெறுவதற்காக சிறுவர்களை பராமரிப்பவர்கள் அவர்களை பயன்படுத்துகின்றனர்.

இதைத்தவிர பிரிட்டனில் வாழும் ஆபிரிக்கர்கள், தமது மதச் சடங்குகளில் பலியிடுதல், இரத்த அபிஷேகம் செய்தல் போன்றவற்றுக்கும் சிறுவர்களைப் பயன்படுத்துகின்றனர்.

ஆகவே, சிறுவர் கடத்தலை தடுக்க பிரிட்டன் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# மும்பை வெடி விபத்தில் 7 பேர் பலி; 16 பேர் காயம்!

மும்பை,ஓக.1

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலம் மும்பை மேற்கில் உள்ள ஜோகேஸ்வரி பகுதியில் சினிமா படப்பிடிப்புகளுக்குத் தேவையான போலி வெடிகுண்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 7 பேர் பலியாகினர்; 16 பேர் படுகாயமடைந்தனர்.

இவ்விபத்து நேற்று அதிகாலை 3.40 மணியளவில் ஏற்பட்டது. காயமடைந்த அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இவ்விபத்து தற்செயலாக ஏற்பட்டது என்று நம்பப்படினும் விபத்துக் கா[illegible] குறித்து ஆராயப்பட்டு [illegible] தெரிவித்தனர்.

# 6ஆம் ஆண்டு நினைவலைகள்
## வீரவணக்கம்

தோற்றம் 02 - 05 - 1979



மறைவு 01 - 08 - 1997

### லெப்டினனட் காவியன்

(விசேட வேவுப் பிரிவு)

**மரியநாயகம் ரெறன்ஸ்** மயிலங்காடு

ஓமந்தைச் சமரில் தன் இன்னுயிரை
மண்ணுக்காக நீத்த மறவனுக்கு வீரவணக்கம்!
ஆண்டுகள் ஆறாகினாலும் உன்
ஆசை முகம் மறக்கவில்லை! உன்னோடு
ஓமந்தைச் சமரில் ஆருயிர் நீத்த மறவர்களுக்கும்
எமது வீரவணக்கங்கள்!

குடும்பத்தினர்.
உற்றார், உறவினர், நண்பர்கள்.

*மயிலங்காடு.* (20902) (21-11-14-)





உ

அனலைதீவு
நயினாகுளம் பூரணை புட்கலா சமேத
# அரிகர புத்திர ஐயனார் ஆலய
## மஹோற்சவப் பெருவிழா



| | | |
|---|---|---|
| 02.08.2003 | மாலை | 5மணிக்கு மஹோற்சவ பூர்வாங்கக் கிரியைகள் |
| 03.08.2003 | காலை | கொடியேற்றத்திருவிழா |
| 09.08.2003 | மாலை | வேட்டைத்திருவிழா |
| 10.08.2003 | இரவு | சப்பரத்திருவிழா |
| 11.08.2003 | காலை | தேர்த்திருவிழா |
| 12.08.2003 | காலை | தீர்த்தத்திருவிழா |
| 13.08.2003 | இரவு | திருக்கல்யாணம் |


பகல் திருவிழா காலை 8மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நிறைவுறும்.
இரவுத் திருவிழா மாலை 7மணிக்கு ஆரம்பமாகி இரவு 11 மணிக்கு நிறைவுறும்.
அடியார்களின் வசதி கருதி விசேட படகு சேவை காலை 9மணிக்கு கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து அனலைதீவிற்கும் பிற்பகல் 2மணிக்கு அனலைதீவில் இருந்து கண்ணகை அம்மன் இறங்குதுறைக்கும் சேவையில் ஈடுபடும்.
வழமைபோல் ஐயனார் ஆலய அன்னதான சபையினரால் அன்னதானம் வழங்கப்படும்.
*"அனைவரும் வருக ஐயன் அருள்பெறுக"*

அனலைதீவு ஐயனார் ஆலய
பரிபாலன சபையினர்.

அனலைதீவு - 5 (20903) (21-11-14-26)




# வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய
# சித்திரத்தேர் வெள்ளோட்டச் சிறப்பிதழ்
## 01.08.2003



UTHAYAN Graphics (20791)

## வாழ்த்துப்பா!

*ஊர்கூடி வடம்பிடித்து ஓங்காரப் பிரணவனை*
*உவந்தேத்தி இருத்தியவன் உல்லாசப் பவனிவர*
*சீர்மேவு வதிரித்தல்தல வீதியிலே பக்தர் குழாம்*
*செழும்கமல ஆனந்த விழிநீரும் சொரிந்திடவே*
*பார்மேவு கலைச்சிற்பம் பக்திநவழ் கதைசொல்லும்*
*பண்பாட்டுச் சித்திரத்தேர் படைத்தனரே வதிரியிலே*
*கார்வண்ணன் பூவற்கரைக் கணபதிதேர்*
*வெள்ளோட்டம்*
*கஜமுகனின் அருள்பொங்கக் காட்சி தந்து வாழியவே.*

*ஆக்கம்*
மகாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் BA, J.P.
*யாழ்ப்பாணம்.*



"அஞ்சியஞ்சி வந்தோர்க்கு
அபயமளித்த பிள்ளையார்"

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பிரதேசத்து வடதிசையில், பாக்கு நீரிணைக்கு அண்மித்து, வண்ணமலர்ச் சோலைகள், மாடமாளிகைகள், கல்விக் கூடங்கள், கலையரங்குகள் உள்ளடங்கிய, கல்வியழகும், செல்வச் செழிப்பும், கருணைமிகு பக்தியும், கலையார்வமும், தொழில் நுட்பமும் கொண்ட மக்கள் வாழும் அழகுமிகு கிராமமே வதிரியாகும். இங்கு நிழல்தரு பெருவிருட்சமாகிய ஆலமரத்தருகே, ஊரின் நடுவிருந்து, நாற்திசையும் வசிக்கும் அவ்வூர் மக்களுக்கு, தன் கடைக்கண் அருட்பார்வை வழங்கும் எம்பெருமான் விநாயகருக்கு, அவர்தம் பேரருட் கருணையால், ஊர் மக்கள் ஆகிய நாம் மனமுவந்து ஊரவர் உபயமாக, அழகிய மாபெரும் சித்திரத்தேரினை உருவாக்கியுள்ளோம். வெள்ளோட்டம் காணும் இந்நாள், வதிரியூர் வரலாற்றில் போற்றத்தக்கது, பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது, பெரு மகிழ்வுக்கும் உரியதாகும்.

இவ்வெள்ளோட்டப் பெருவிழா எம்பெருமானே முன்னின்று செயற்படுத்தினாரோ என்று வியத்தக்க பாணியில், எம்மால் சிந்தித்தும் பார்க்க இயலாத அளவிற்கு, சகல செயற்பாடுகளும் அதி அற்புதமாக நடைபெறுகின்றன. இதற்கெல்லாம் கர்த்தாவாக விளங்கும் வதிரி பூவற்கரைப் பிள்ளையாரின் சாந்நித்தியம் பெருகி, அவரது கருணை மழை, வெள்ளோட்டவிழா சம்பந்தப்படும் அத்தனை ஜீவன்களுக்கும் பொழிய, எம்பெருமானின் திருவடிகளை மனமொழி மெய்களால் இறைஞ்சுகின்றோம்.

*வெள்ளோட்டம் பார்க்குமெம் பூவற்கரை விநாயகா*
*விக்கினங்கள் ஏதுமின்றி தேரோட நின்னருள்தா*
*உள்ளனபொடு ஊரிணைந்து உருவான சித்திரத்தேர்*
*உன்னருளை வேண்டிடப் பவனியின்று வருகுதையா*
*வெள்ளம் போல் அலையலையாய் பக்தர் சேர்ந்து வடம்பிடித்து*
*வேகமாக வரும்தேரினில் நீ அமரும் நாளதில்*
*அள்ளிடக் குறைந்திடா அருட்பேற்றை அனைவர்க்கும்*
*அளித்திடுவாய் வதிரி பூ வற்கரையுறை விநாயகா.*

***ஆக்கம்:***
**கவிஞர் இரா. யோகராஜன் (சோதிடர்)**
**வதிரி**

## வெள்ளோட்டம்

*சித்திரத்தேர் வெள்ளோட்டம்*
*இச்சிறப்பின் அடிநாதமே வதிரிக் கிராமத்தாய்*
*பெற்றெடுத்த - ஏற்றெடுத்த*
*அவளை நேசித்த குழந்தைகளின்*
*உறுதியான பாசமிக்க*
*உதவு கரங்கள் தான்*
*சொந்த நாட்டிலும்*
*சென்ற பல நாடுகளிலும்*
*சிந்திய உழைப்பின் வியர்வைகளே*
*சித்திரத்தேர் வெள்ளோட்டம்*

*ஆக்கம்*
கவிஞர் "விஸ்ணுப்பிரியா"
*வதிரி.*

## ஆலய குருக்களின் ஆசி

"வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்" என்ற நாவுக்கரசரின் திருவாக்கிற்கு அமைய, எம் வதிரியூர் மக்களின் நீண்டகாலப்பிரார்த்தனையின் பெறுபேறாகப் பூவற்கரை விநாயகருக்கு சித்திரத்தேர் உருவாகி, இன்று வெள்ளோட்ட நிகழ்வும், மக்களகரமாக நிறைவுற எம்பெருமானின் திருவருளை வேண்டுகிறேன்.

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய நித்திய குருக்கள்
பிரம்மஸ்ரீ அ.ரவீந்திர சர்மா அவர்கள்

## ஆதீன முதல்வரின் அருளாசி

விநாயக அடியார்களே!

வதிரி பூவற்கரைப் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். இத்தேரை பல சித்திர வேலைப்பாடுகளுடன் உருவாக்கியுள்ள சிற்பக் கலைஞர்களை வாழ்த்துகின்றேன். விநாயகப் பெருமானுக்குத் தேரை உருவாக்கிய திருப்பணிச் சபையினரை வாழ்த்துகின்றோம். தேர் வெள்ளோட்ட விழா சிறப்பாக நடைபெற்று, அனைவருக்கும் இறையருள் கிடைக்கப்பிரார்த்திக்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்

## ஸ்தபதியின் பிரார்த்தனை

அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாகி ஆண்டருள் புரியும் இறைவனாகிய வதிரி பூவற்கரைப் பிள்ளையாரை மனதிலிருத்தி, அவருக்கு நாம் உருவாக்கிய அழகிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற நிகழ அவன்தாள் பணிகின்றோம்.

சித்திரத்தேரினை உருவாக்கிய உடுப்பிட்டி இந்திரகலாலயம்
ஸ்தபதி நாகரத்தினம் மகேந்திரன் அவர்கள்

## துர்க்கா துரந்தரியின் ஆசி

வதிரிப்பகுதி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். மகோற்சவங்களில் மிகவும் முக்கியமானது .இரதோற்சவப் பெருவிழாவாகும். எம்பெருமான் விநாயகனுக்குச் சித்திரத்தேர் அமைத்து, வழிபடும் அனைத்துப் பெருமக்களையும் நான் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

துர்க்கா துரந்தரி. சிவத்தமிழ்ச் செல்வி.
தலைவர். ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை
செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி J.P. அவர்கள்

## பிரதம குருக்களின் ஆசி

ஸர்வ மங்களானி பவந்து எல்லாம் வல்ல வதிரி பூவற்கரை விநாயகரின் திருவருளினால், அவருடைய அருட் பார்வையினால், இக்கிராமமக்களுக்கு அருள்பாலிக்க வேண்டி எம்பெருமான் வீதிவலம் வருவதற்குச் சித்திரத்தேர் உருவாக்கி, அதன்வெள்ளோட்டம் காண்பது நாம் செய்த பெரும்பாக்கியமாகும். எமது நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு, யாம் மகிழ்வுடன் இறைபக்தி உடையவர்களாய், சீரும் சிறப்புடன் வாழவேண்டும். என்று விநாயகப் பெருமானது சித்திரத்தேர் வெள்ளோட்ட இன்றைய பொன்னாளில் வேண்டிக் கொண்டு எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பிரதம குருக்கள்
பிரம்மஸ்ரீ அ.பிரேமேச்சந்திரக் குருக்கள், சமாதான நீதிவான்.

## அமைச்சரின் வாழ்த்துரை!

வடமராட்சிப்பகுதியில் சைவமும் தமிழும் செழிப்புற்று வளர்ந்திருக்கும் பிரதேசங்களிலே வதிரிக் கிராமம் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இக்கிராமமக்களின் குலதெய்வமாக இருந்து. இவர்களுடைய அறிவுவிருத்திக்கும், நல்வாழ்விற்கும் வழிகாட்டும் தெய்வம் பூவற்கரை விநாயகப் பெருமான். வதிரி மக்கள் விநாயகப் பெருமானுக்குச் சித்திரத்தேர் ஒன்று செய்ய நினைத்து அக்காரியத்தை செவ்வனே நிறைவேற்றிட உள்ளார்கள். இச்சித்திரத்தேர் வெள்ளோட்டம் இனிது நிறைவெய்த ஆண்டவனை வேண்டுவோம்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்
மாண்புமிகு உயர்திரு. தி.மகேஸ்வரன் (பா.உ) அவர்கள்

உதயன்

# தகைமை அற்றோரால் தரம் இறங்கும் கல்வி!

கல்வி அமைச்சு அண்மையில் நடத்திய ஆய்வு ஒன்று அதிர்ச்சி தரும் புள்ளி விவரங்களை வெளிப்படுத்தியிருக்கின்றது.

நாட்டில் உள்ள மொத்தப் பாடசாலைகளில் மூன்றில் ஒரு பங்கு பாடசாலைகளின் அதிபர்களுக்கு அந்தப் பதவிகளில் இருப்பதற்கான அடிப்படைத் தகைமை, தராதரம் இல்லை என்பதே அந்த அதிர்ச்சித் தகவலாகும்.

நாட்டில் மொத்தம் 9 ஆயிரத்து 876 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் சுமார் மூவாயிரம் பாடசாலைகளில் பணியாற்றும் அதிபர்களுக்கு அந்தப் பதவியில் இருப்பதற்கான தகுதி, தகைமை அறவே கிடையாது.

ஒழுங்குமானமாகச் செயற்பட்ட இந்த நியமனங்களால் கிராமியப் பாடசாலைகளில் கல்வித் தரத்தை உயர்த்தும் முயற்சிகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு கூறுகின்றார்.

'அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானவர்கள்' என்ற பாதிப்பைக் காட்டியே - அதற்கு நிவாரணமாகவே - இத்தகைய அதிபர் பதவிகளைப் பலரும் சுவீகரித்துக் கொண்டிருப்பதாகக் கூறும் அதிகாரிகள், அது காரணமாக அவர்களுக்கு எதிராக மாற்று நடவடிக்கை எடுக்கமுடியாமல் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்.

இலங்கை அதிபர் சேவை தரம் I, தரம் II, தரம்III சித்தியடைந்த பலர் அதிபர் பதவிக்குரிய தகைமை இருந்தும் பல பாடசாலைகளில் தொடர்ந்தும் ஆசிரியர்களாகப் பணிபுரிந்துகொண்டு இருக்கின்றார்கள்; அல்லது இலங்கை கல்விச் சேவை தரமுடையவர்கள் பணியாற்றவேண்டிய கல்வி அதிகாரிகள் பதவிகளில், இடம்பிடித்துக் கொண்டு கல்வி அதிகாரிகளாகக் கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆசிரிய சேவைச் சம்பளத்திட்டம், அதிபர் சேவைச் சம்பளத் திட்டம், கல்விச் சேவைச் சம்பளத்திட்டம் ஆகியவற்றுக்கு இடையே நிலவும் பெரிய தராதர வேறுபாடுகள், முரண்பாடுகள், சேவை மூப்பு கவனிக்கப்படாமை போன்ற பிரச்சினைகளும் -

ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரிப் பதவிகள் இடையே காணப்படும் பதவி கௌரவக் குழப்பங்களும் -

தரமுடையோர் தமது தரத்துக்கு அப்பால் இவ்வாறு மாற்றுப் பதவிகளில் ஆசைகொண்டு அவற்றைக் கட்டிப்பிடித்து வைத்துக்கொண்டிருக்கத் தூண்டுகின்றன.

எது எப்படியென்றாலும் மொத்தத்தில் பாதிப்பு நமது கல்வித் துறைக்குத்தான்.

மத்திய கல்வி அமைச்சின்கீழ் வரும் பல தேசியப் பாடசாலைகளிலும்கூட இதே நிலைமைதான். நாட்டில் உள்ள 27 தேசியப் பாடசாலைகளில் இவ்வாறு தராதரம் அல்லது தகுதி, தகைமை அற்ற அதிபர்கள் பதவியில் இருப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

அதிபர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் உரிய ஆதாரங்களோடு தரப்பட்டாலும் விசாரணைகள் நடத்தப்படுவதில்லை; அல்லது மந்த கதியில் நடக்கின்றன. விசாரணைகள் நடத்தப்பட்டாலும் விசாரணை அறிக்கைகள் வெளிவருவதில்லை; விசாரணை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை; மூத்த கல்வி அதிகாரிகள் தங்களின் பக்கச் சார்பு காரணமாகவோ அல்லது தங்களுக்கேன் பிரச்சினை என்று கருதியோ உரிய நடவடிக்கை எடுக்காமல் காலத்தை இழுத்தடித்து, கல்வியைப் பாழாக்குகின்றார்கள்.

நமது நாட்டின் எதிர்காலத்துக்கே வழிகாட்டப் போவது நமது கல்வித்துறைதான். கல்வித்துறையில் சிறிய அலகு - மூல நிலையம் - பாடசாலைகள். அவை திறம்பட செயற்படுவதிலும், சிறப்பாகக் கல்வியைப் போதிப்பதிலும், மாணவர்களைச் சரியாக வழிநடத்துவதிலும்தான் நமது நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. இதைக் கல்வித்துறை சார்ந்த அரசியல் தலைமைத்துவங்களும், கல்வி அதிகாரிகளும் மறந்துவிடக்கூடாது.

தராதரமற்றோர் அதிபர் பதவியில் இருக்கும் அவல நிலையை நீக்கி, சகல பிள்ளைகளுக்கும் சமமான கல்வி வாய்ப்புக் கிடைப்பதை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை அடுத்த ஆண்டுக்குள் தாம் பூர்த்திசெய்வார் என கல்வி அமைச்சர் கொடித்துவக்கு உறுதி கூறுகின்றார்.

அது நிறைவேறுமா அல்லது அரசியல் வாதிகளின் வழமையான வாக்குறுதிபோல காற்றோடு கலந்து போகுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# வாரத்தில் ஏழு தினங்களிலும் கால்நடை வைத்தியசாலை

## இயங்கும் என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.1

"யாழ். மாவட்ட கால்நடை வைத்தியசாலை வாரத்தில் ஏழு நாள்களும் செயற்படும்" என யாழ். மாவட்ட கால்நடை வைத்திய அத்தியட்சகர் எம்.தங்கராசா அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போரின் வசதியையும், கால்நடை அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு, வாரத்தில் எல்லாத் தினங்களிலும் கால்நடை வைத்தியசாலையைத் திறந்து வைத்திய சேவை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

யாழ். நகரில் நாவலர்வீதி - பிறவுண் வீதி சந்தியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கால்நடை வைத்தியசாலை கடந்த காலங்களில் ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொதுவிடுமுறை தினங்களில் மூடப்பட்டிருந்தது. புதியநடைமுறையின் பிரகாரம் ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொதுவிடுமுறை தினங்களிலும் செயற்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஒ)

# நாட்டு நடப்பு

## யாருக்கு இறைவன் சொந்தம்?

அப்பனை அம்மை தன்னை
அருள் மிகு விநாயகரை
செப்பரும் முருகன் தன்னை
சிறப்புறு ஐயனாரை
தப்பாது காவல் செய்யும்
தனிப்பெரும் வயிரவரை
எப்போதும் ஏற்றிப் போற்றி
இறைஞ்சுதல் செய்து விட்டு
எப்படிக் கூண்டில் ஏற்றி
இட்டம் போல் வாது செய்து
செப்புக நீதிபதியாரே!
சிறப்புறு தெய்வம் எல்லாம்
எப்படி? யாருக்குச் சொந்தம்?
என்று கேட்கும் மூடர்
இப்படி தெய்வ நிந்தை
இளைப்பதும் நீதி யாமோ?

- விகடகவி.

## எங்கோ தவறு நடந்துகொண்டிருக்கிறது

# மணிவிழாவின்போது திரண்ட கூட்டம் அஞ்சலி நிகழ்வில் காணாமற்போனதே!

## என்.கே.பியின் நினைவு உரையில் 'புதுவை' வேதனை



யாழ்ப்பாணம்,ஓக.1

நாதஸ்வர வித்துவான் என்.கே.பத்மநாதனின் மணிவிழா நிகழ்வில் பெருந்திரளாக மக்கள் கலந்துகொண்டிருந்தனர். ஆனால், இப்பொழுது அவரது அஞ்சலி நிகழ்வில் வெறும் முப்பத்திரண்டு பேர் மட்டுமே இருக்கின்றார்கள். இது எனக்கு மிகவும் வேதனையளிக்கிறது. இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது.

மறைந்த நாதஸ்வரக் கலைஞர் என்.கே.பத்மநாதனின் அஞ்சலிக் கூட்டம் நேற்றுமுன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றவேளை அதில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் மிகவும் குறைந்த எண்ணிக்கையானோரே கலந்துகொண்டிருந்தனர். இதனைக் கண்டித்த புதுவை இரத்தினதுரை, தனது மன வேதனையையும் வெளியிட்டார்.

அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:-

முன்னர் என்.கே.பத்மநாதனுக்கு மணிவிழா எடுக்கப்பட்டபோது அங்கு சனத்திரள் நிரம்பி வழிந்தது. ஏனென்றால், அப்போது அவரது சேவை தேவைப்பட்டது. அவரிடம் இருந்து நிறையப் பெற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. இப்போது அவர் இல்லை. எனவே, அவரிடமிருந்து எதனையும் பெறமுடியாது. அதனால் அஞ்சலிக் கூட்டத்திற்கு பலர் வரவில்லை.

எனது பிரியத்துக்குரிய பத்மநாதன் அவர்களே, இன்று உங்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக இந்த மண்டபத்திலே நாம் கூடியிருக்கின்றோம். ஏதோ நடந்துகொண்டிருக்கின்றது. எங்கோ தவறு நடக்கிறது. எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இந்த மண்டபத்திலே விரிக்கப்பட்டிருக்கின்ற பாய்களிலும் பார்க்க நிகழ்வுக்கு வந்திருக்கின்ற சனம் குறைவே, என்ன நடந்தது?

இசைவேளாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் எங்கே? இராமநாதன் நுண்கலைக்கழகம் எங்கே? யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை எங்கே?

கோயில் தர்மகர்த்தா சபைகள் எல்லாம் எங்கே? நாளைக்கு இதுதான் எல்லோருக்கும் நடக்கப் போகிறது.

இதைச் சொன்னால்தான் உங்களுக்கு கோபம் வருகிறது; எங்கள் மீது எரிச்சல் வருகிறது.

கந்தபுராண கலாசாரம் என்கிறோம். இசைபாடிடல் மறந்தறியோம் என்கிறோம். நினைக்கும் போது உண்மையிலேயே மிகவும் வேதனையாக இருக்கிறது.

எனக்கும் பத்மநாதனுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அவர் கொழும்பில் இருக்கும்போதுகூட எங்களுடைய ஆள்கள் அங்கே போய் பார்த்துக்கொண்டவர்கள்.

அவரது மரண வீட்டுக்கு வரமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை எனக்கிருந்தது. அதற்கு வேறு காரணம் இருந்தது.

இன்று அவருக்கு முத்திரை வெளியிட வேண்டும் என்கிறார்கள். பின்பக்கத்தில் எச்சில் பூசி முன்பக்கத்தில் முகத்துக்கு ஒரு குத்துக் குத்துவதற்கு ஒரு முத்திரை தேவையா?

அவரது பெயரில் மண்டபம் அமைக்க வேண்டும் என்கிறார்கள். நடத்தக்கூடிய ஆள்களா இவர்கள்? அப்படி ஒரு பழக்கம் எங்களுக்கு இருக்கா? சும்மா வாயில் வந்தபடி ஏன் கதைக்கிறீர்கள்?

எனது கவிதை நூலிலே போராட்டத்தைத் தவிர ஒரேயொரு கவிதைதான் கூடுதலாக சேர்த்திருந்தேன். அது என்.கே.பத்மநாதன் அவர்களின் மணிவிழாவுக்கு நான் வாசித்த அந்தக் கவிதைதான்.

இங்கிருக்கின்ற சிலராவது அவரது இசையை இசைத்தட்டாக வெளியிடலாம். அதற்கு முயற்சி செய்தால் சகல ஒத்துழைப்பையும் நாங்கள் வழங்குவோம். இளைய தலைமுறையினர் இதனைச் செய்யலாம். நினைவு நாளுக்கு அந்த ஒலித்தட்டை வெளியிட வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டத்தை அவர் நேசித்தவர். அதே நேரம் விமர்சித்தவரும்கூட; கலைஞருக்குரிய அந்த மிடுக்குடன் போராட்டத்தை நேசித்தவர்.

ஜனரஞ்சகமான ஒரு கலைஞனின் அஞ்சலி நிகழ்வில் மண்டபம் பெரு வெற்றிடமாக இருக்கிறது. ஒவ்வொன்றும் இப்படியே குறைந்து குறைந்து போனால் இந்தக் குடாநாடு என்னவாகும்? வெறும் பாலைவனத்தில் கைவீசி உலா வருவதற்காகவா நாங்கள் வாழுகிறோம்?

வெறும் சோற்றுப் பிண்டங்களாக உண்டு விட்டு சமிபாடடையப் படுவதற்கா நாங்கள் வாழுகிறோம்.

வெறும் பேச்சுடன் மட்டும் நின்று விடாதீர்கள். செய்யுங்கள் பிரமுகர்களைப் பேசவிடாதீர்கள். என்னையும் சேர்த்துத்தான் நான் சொல்கிறேன். அந்த அவலம் வேண்டாம்.

செய்யக்கூடியவர்களே பேசுங்கள்; பேசுபவர்களே செய்யுங்கள். இந்த நாதஸ்வரக் கலைஞனுக்கு ஏதாவது செய்ய விரும்பினால் அதனை பேச்சிலே காட்டாமல் செயலிலே காட்டுங்கள்.

இந்த நாதஸ்வர கலையைக் கட்டிக்காக்க வேண்டுமானால் இதனை ஒரு ஜாதிக்குரிய கலை என்ற நிலையிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

இந்தியாவில் இதனை மாற்றி விட்டார்கள். இதனை எல்லோரும் கற்கவேண்டும்; அதற்குரிய வழிவகைகள் செய்யப்படவேண்டும் -

என்றார் புதுவை இரத்தினதுரை. (ஒ-4-ரி)

## எதிர்வரும் டிசெம்பர் 31 வரை

# ஆசிரியர்சேவை பதவி உயர்வு வழங்க நிலையியற்குழு அனுமதி

அச்சுவேலி,ஓக.1

இலங்கை ஆசிரியர் சேவையின் பதவி உயர்வு தொடர்பான செயற்பாடுகளை இந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிவரை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை ஆசிரியர் சேவை நிலையியற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவையின் பதவி உயர்வு மற்றும் தரஉயர்வு தொடர்பான செயற்பாடுகள் 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிமுதல் இடைநிறுத்தப்பட்டு இருந்தது.

இலங்கை ஆசிரியர் சேவைப் பதவி உயர்வு தொடர்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2000/14ஆம் இலக்க சுற்றறிக்கை இச்செயற்பாடுகளை 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிவரை என வரையறை செய்து கூறியதால் கடந்த மூன்று வருடங்களாக ஆசிரியர் சேவைப் பதவி உயர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஆட்சேபனைகளைத் தெரிவித்து வந்தபோதிலும் கடந்த சில வருடங்களாக ஆசிரியர் சேவை நிலையியற்குழு கூட்டப்படவும் இல்லை; சுற்றறிக்கை மாற்றப்படவும் இல்லை.

இந்நிலையில், ஆசிரியர்சேவை தரஉயர்வுகள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜுலை 23ஆம் திகதி கூடிய ஆசிரியர் சேவை நிலையியற்குழுக் கூட்டத்தில் கல்விஅமைச்சின் 2000/14ஆம் இலக்கச் சுற்றறிக்கையை 2003ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிவரை நடைமுறைப்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள ஆறு ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதி, திறைசேரி உயர் அதிகாரிகள், கல்வி அமைச்சின் உயர் அதிகாரி உள்ளடங்கிய ஆசிரியர் சேவை நிலையியற் குழுவின் தீர்மானம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

2000/14ஆம் இலக்க சுற்றறிக்கை மூன்று வருட காலம் முன்தள்ளப்படுவதால் ஆசிரியர் பதவி உயர்வுக்கான வயது, மூப்பு மற்றும் சேவை மூப்பு இருந்தும் பதவி உயர்வு பெறமுடியாமல் இருந்து வந்த பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பயனடைய உள்ளனர் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார். (ஒ-11)

### நாளை

ஆடி 17
சனிக்கிழமை
(02.08.2003)
திதி : சதுர்த்தசி
முற்பகல் 8.53 வரை
நட்சத்திரம்: உத்தரம்
முன்னிரவு 8.32 வரை
சுபநேரம்: 3.03 - 4.33
ராகுகாலம்: 9.03 - 10.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மனம் விட்டுப் பேசுவது நன்று. மனதில் பட்டதை எல்லாம் பேசுவது தவறு.

# செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ள வேண்டுகோள்

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு பின்வருவோர் வேண்டப்படுகின்றனர்.

திருமதி நிர்மலநாதன் மேரி ரஞ்சினி 110, பூம்புகார், அரியாலை, யாழ்ப்பாணம், திருமதி பாலேந்திரன், சுபாஷினி 92, பூம்புகார் அரியாலை, யாழ்ப்பாணம், திருமதி செல்வரட்ணம் சௌபாககியலஷ்மி 50/35, செட்டி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், திருமதி சிற்றம்பலம் சின்னம்மா "காசிவாசம்" சுழிபுரம், திருமதி செபஸ்தியாம்பிள்ளை நீற்றம்மா கொட்டடி வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம், திருமதி அரியரட்ணம் தங்கேஸ்வரி காலிங்கன் தியேட்டர் அகதி முகாம், இணுவில்.

## இலவச மருத்துவ முகாம்

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 'ஆசியா' மருத்துவ வைத்தியச் சங்கம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியின் அனுசரணையுடன் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இரு தினங்களும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த இலவச மருத்துவ முகாமில் ஜப்பான் நாட்டு மருத்துவ நிபுணர்களும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

---

அச்சுவேலி ஸ்ரீ விக்னேஸ்வரா வி.க. நடத்தும்
வருடாந்த

## மாபெரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

எமது விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் கரபந்தாட்ட (செற் - அப்) சுற்றுப்போட்டியை ஆண், பெண் இருபாலாருக்கும் நடத்தவுள்ளதால் பங்குபற்றும் கழகங்களினை எதிர்வரும் 05.08.2003 ஆம் திகதிக்கு முன்பாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அச்சுவேலி.
(20900) (26-16-14-24) - ஸ்ரீ விக்னேஸ்வரா வி.க.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 14 - 10 - 1918
விண்ணில் 04 - 07 - 2003

அமரர்

### அம்பலவாணர் செல்லத்துரை

(மிருசுவில் கிராமசபை முன்னாள் அங்கத்தவரும், இளைப்பாறிய மிருசுவில், கண்டாவளை கிராமசேவையாளரும், மிருசுவில் கொட்டிகை கோயிற்குளம் அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாவும்)

"எங்கள் குடும்பக் குலவிளக்கே!
எம்மை விட்டு நீங்கள் எங்கு சென்றீர்கள் ஐயா?
என்றும் உங்கள் நினைவலைகள்
எங்கள் நெஞ்சங்களில் நித்தமும் நிலைத்திருக்கும்!

04.07.2003 இல் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு எமக்குப் பலவழிகளிலும் உதவிகள் செய்து ஆறுதல் கூறி இறுதிக்கிரியையிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் ஆத்மசாந்திக்கிரியைகள் நாளை (02.08.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பமாக வந்து கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
க. கணபதிப்பிள்ளை (மருமகன்)
"செல்வகிரி",
மிருசுவில். (20837) (26-24-16-14) - குடும்பத்தினர்.

---

## இலங்கை மின்சார சபை யாழ். பிரதேசம்
## மின்தடை அறிவித்தல் - 2003.08.02

அவசர பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களுக்கான மின்விநியோகம் 2003.08.02 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை தடைப்பட்டிருக்கும் என்பதைப் பாவனையாளருக்கு அறியத்தருகின்றேன்.

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்பாக மின்சாரம் வழங்கப்படலாம் என்பதையும் பாவனையாளர் கவனத்திற்கொள்ளவும்.

**மின்தடைப்படும் இடங்கள்:**

யாழ்ப்பாண மார்க்கம்: யாழ். மாநகர சபைப் பகுதி முழுவதும், கோண்டாவில் கிழக்கு, யாழ். பல்கலைக்கழகப்பகுதிகள்.

சாவகச்சேரி மார்க்கம்: ஊரெழு, உரும்பிராய், கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகள்.

பருத்தித்துறை மார்க்கம்: புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, வடமராட்சிப் பகுதிகள்.

இதனால் பாவனையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக வருந்துகிறேன்.

பிரதேச மின்பொறியியலாளர் அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

மின் பொறியியலாளர்,
யாழ்.பிரதேசம்.

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை.
(C/29203) (25-24-16-14)

---

UNIVERSITY OF DUNDEE
**Founded 1881**

**STUDY IN ONE OF THE UK'S MOST SCENIC CITY LOCATIONS**

The University of Dundee is one of Scotland's premier teaching and research institutions. It is ranked in the UK top 10 for teaching quality by the Times Higher Education Supplement and is also in the UK top 10 for graduate employment.

**ADMISSIONS AVAILABLE FOR SEPTEMBER 2003**

Interviews will be held at UTHAYAN AUDITORIUM, 361, KASTHURIYAR ROAD, JAFFNA.

*INTERVIEWS BY* **Mr. Iain Robertson, International Office Manager**

*Date and time:* **Monday 4 August 2003, 10.00 a.m. 5.00 p.m.**

Undergraduate courses in: Business, Computing, Engineering (Electronic, Civil, Mechanical, Computer), Life Sciences, Law, Art, Design & Architecture

Postgraduate Courses in: International Business, Engineering, Law

Students should bring qualification transcripts and letters of reference if possible (art, design and architecture also require portfolio of art - work)

★ Partial scholarships guaranteed to successful applicants on most courses ★

Interested students should telephone for an appointment:
**Vibhu Wickramasinghe - 01 802 188 / 0777 715987**

international@dundee.ac.uk
www.dundee.ac.uk (C/29218) (24)

---

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 07.05.1942
உதிர்வு 02.07.2003

திருமதி

### கிருஸ்ணபிள்ளை தவமணி

கண்மணியே எங்கள் தவமணி அம்மா!
எங்கு நீ சென்றாய் எம்மைத் தவிக்கவிட்டு?
கண்காணாத் தேசமாம் கனடா தேசத்தில்
காலனவன் காவு கொண்டானோ?
கண்குளிரக் காணவில்லை
உங்கள் உயிரற்ற திருமேனியை
எங்கள் கண்களில் கண்ணீர் வெள்ளம்
காலமெல்லாம் கலங்கி நிற்கும்! எங்களுக்குத்
தேறுதல் சொல்ல யாரும் இல்லை அம்மா!
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

காங்கேசன்துறை,
த.மு.: அளவாவோலை,
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

உமது பிரிவால் கலங்கும்:
பிள்ளைகள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள், மைத்துனர்கள்.

(20873) (24-14-16)

---

## நீங்கா நினைவுகளில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி யோ.நாகரஞ்சினி

திருமதி

### யோகச்செல்வன் நாகறஞ்சினி

அன்னை மடியில் 01~04~1962
விநாயகர் திருப்பாதத்தில் 12~08~2002

திதி: நாகசதுர்த்தி 01-08-2003

*அன்புக்கரம் நீட்டி எம்மை அரவணைத்து அன்பு மொழி பேசி*
*பாசமுடன் எம்மை வளர்த்தெடுத்த அம்மாவே!*
*உங்கள் அன்பு முகம் பார்த்தே கல்வி கற்றுப் படுத்துறங்கிப் பழகிய நாம்.*
*இப்போது தூக்கமின்றித் துடிக்கின்றோம் அம்மாவே!*
*உங்கள் பிரிவுத் துயரில் ஆண்டு ஒன்று ஓடி மறைந்திடினும்*
*உங்கள் அன்பு முகம் மறைந்திடுமா?*
*ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் எம் நெஞ்சமதில்*
*உங்கள் ஞாபகம் நிலைத்திருக்கும்!*
*எத்தனை யுகங்கள் மலரட்டும் உங்கள் நினைவுகள் என்றும் சுகமானவையே!*

உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம்வல்ல விநாயகப் பெருமானின் சதுர்த்தியில் சிறந்த நாகசதுர்த்தி நன்னாளில் நவாலி சிந்தாமணிப் பிள்ளையார், நவாலி களையோடை கண்ணகை அம்மாள், நவாலி ஸ்ரீநாகராஜராஜேஸ்வரி அம்மாள் துணைகொண்டு பிரார்த்திக்கின்றோம்.

நவாலி தெற்கு,
மானிப்பாய். (சி-29219) (19-24-14-16)

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

# கிரனைட் உற்பத்தியில் வெளிநாட்டார் இலங்கையரின் வாய்ப்புக்கு குந்தகம்

## தேசிய உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கக் கோருகிறார் விக்கிரமசிங்க

*கேள்வி:-* உற்பத்தியாளர்களுக்கு அவர்களது உற்பத்திகளுக்குத் தேவையான ஆதரவு சலுகைகள் கிடைத்தது குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?

*பதில்:-* தேசிய உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென நான் நினைக்கின்றேன். இந்த நடைமுறைகள் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆனால், இலங்கையில் இந்த நடைமுறை இல்லை. இதனால், ஆயிரத்தில் ஓர் உற்பத்தியாளர்தான் வெற்றி பெறுகிறார்.

*கேள்வி:-* உங்கள் துறையில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன?

*பதில்:-* நாங்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை, கருங்கல் இப்போது வெளிநாடுகளுக்கு முழுமையாக ஏற்றுமதி செய்யப்படுவதுதான்.

கருங்கற்களை வெட்டுவது, அவற்றை மினுங்கச்செய்வது ஆகியன எல்லா நாடுகளிலும் ஒரே வகையில்தான் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தும் இலங்கைக் கருங்கற்களில் காணப்படும் பல வகையான கோடுகள் வெளிநாட்டு கருங்கற்களில் இல்லை.

இலங்கையில் இருந்து கருங்கற்களை எடுத்துச்சென்று நமது நாட்டு உற்பத்தியெனக் கூறி அவர்கள் விற்பனை செய்வதால் நமது நாடு பாதிக்கப்படுகிறது.

இலங்கையில் கிரனைட் உற்பத்திக்குத் தேவையான கருங்கற்கள் இனங்காணப்படவில்லை. இதனால் பெறுமதிமிக்க கருங்கற்கள் சாதாரணமான வீடுகள் நிர்மாணத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் கிரனைட் உற்பத்தித்துறை எதிர்காலத்தில் பாதிக்கப்படலாம்.

*கேள்வி:-* உங்களுக்கு செலான் வங்கி வழங்கிய ஆதரவு குறித்துக் கூறுங்கள்?

*பதில்:-* உண்மையிலேயே எனது வர்த்தக முயற்சிகளுக்கு முழு ஆதரவையும் வழங்கியது செலான் வங்கிதான். கம்பஹாவில் எனது தொழிற்சாலை அமைப்பதற்கும் இயந்திர வகைகளைக் கொள்வனவு செய்வதற்கும் செலான் வங்கி கடன் வழங்கி உதவி புரிந்தது. சில சந்தர்ப்பங்களில் தொலைபேசி மூலம்கூட எனது தேவைகளை பூர்த்தி செய்து வைத்தது செலான் வங்கி.

*கேள்வி:-* இலங்கையில் கிடைக்கும் கருங்கற்கள் கிரனைட் உற்பத்திக்கு பொருத்தமானவையா? தனித்தன்மை மிக்கவையா?

*பதில்:-* இலங்கையில் கிடைக்கும கருங்கற்கள் தனித்தன்மை மிக்கவை. அவற்றில் வைரம் பாய்ந்தாற்போல் கோடுகளும் காணப்படுகின்றன. இதனால், வெளிநாட்டவர்கள் இலங்கை கருங்கற்களால் தயாராகும் தரையில பதிக்கும் கிரனைட்டுகளை விரும்பி வாங்குகின்றனர். அத்துடன், வடமேல மாகாணத்தில் கிடைக்கும் கருங்கற்கள் 'கிரனைட்' தயாரிப்பின்போது ஒருவகை பச்சை நிறத்தைக் கொண்டுள்ளன. இவை தனித்தன்மை வாய்ந்தவை.

*கேள்வி:-* உங்கள் எதிர்காலத் திட்டங்கள் என்ன?

*பதில்:-* அனைத்து இலங்கையர்களும் தமது வீடுகளுக்கு தரையில் பதிக்கும் வகையில் குறைந்த விலைக்கு கிரனைட் தரை ஓடுகளை உற்பத்தி செய்யவேண்டும். அத்துடன் சர்வதேச சந்தையில் இலங்கையில் தயாராகும் 'கிரனைட்' இயற்கை தரை ஓடுகளை பிரபல்யப்படுத்துவதே எனது நோக்கமாகும்.

- இவ்வாறு கூறினார் விக்கிரமசிங்க.



ரி.என்.எல். தொலைக்காட்சியில் 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் எச்.சீ.எல்.விக்கிரமசிங்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருபபவர் மொழிபெயர்ப்பாளர் சட்டத்தரணி செ.குணரத்னம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரி.என்.எல். தொலைக்காட்சியின் 'வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் கடந்த 29ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் எச்.சீ.எல்.விக்கிரமசிங்க

மினுவாங்கொடையில் பிறந்து வளர்ந்து கல்வி பயின்றவர் எச்.சீ.எல்.விக்கிரமசிங்க.

இவர் சிறுவயதிலிருந்தே கைத்தொழில் துறையில் ஆர்வம் கொண்டவர். தொழில் பயிற்சிக் கல்லூரியில் மோட்டார் தொழில்துறையில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றார்.

1972ஆம் ஆண்டு இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் இவரது உற்பத்திகள் உள்ளூர்ச் சந்தையில் நன்கு விற்பனையாகின. திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக இவரது தொழில் பாதிக்கப்பட்டது. பின்னர் 'ஸ்டார் கிரனைட்' கம்பனியைத் தொடங்கி தரையில் பதிக்கும் கிரனைட்டை உற்பத்தி செய்ய ஆரம்பித்தார்.

ரி.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் விக்கிரமசிங்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

# வடமராட்சி கிழக்கில் புதிய படைமுகாமா? வெகுஜன எதிர்ப்பு கிளம்புமென எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்,ஒக.1

வடமராட்சி கிழக்கு பொற்பதியில் புதிய படைத்தளம் நிறுவப்பட்டால் அதற்கு எதிராக பாரிய வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும்.

வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம் இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

வடமராட்சி கிழக்கில் புதிய படைத்தளம் ஒன்றை நிறுவ இராணுவம் ஏற்பாடு செய்துவருவதாக வெளியாகிய செய்திகளை அடுத்து ஒன்றியம் இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

ஒன்றியம் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் புதிய இராணுவத்தளம் அமைக்கப்பட்டு வருகின்றமை அப்பிரதேசத்தில் வாழும் மக்களின் இருப்பிடத்தினையும் சுதந்திரமான நடமாட்டத்தினையும் மேலும் பாதிப்பதாகவே அமைந்திருக்கின்றது. ஏற்கனவே பொற்பதிக் கிராமத்தில் அமைக்கப்பட்டு இருக்கும் இராணுவ முகாமிற்குள் 15இற்கும் மேற்பட்ட பொதுமக்களின் வீடுகள் உள்ளடக்கப்பட்டிருப்பதால் அவர்கள் உறவினர்களின் வீடுகளில் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இந்நிலையில், மீண்டும் அங்கு ஒரு பாரிய இராணுவ முகாமை அமைத்து இராணுவத்தினரைத் தங்கவைப்பது என்பது எம்மக்களின் இயல்பு வாழ்க்கையை மேலும் பாதிப்பதாகவே அமைகின்றது.

வடமராட்சி கிழக்குப் பகுதியின் நாகர்கோவில் பிரதேசத்தில் ஏற்கனவே உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பாரிய இராணுவ முகாமை அமைத்திருப்பது எம்மக்களின் மீள்குடியேற்றத்திற்கும், பருத்தித்துறை - மருதங்கேணி வீதிப்போக்குவரத்துத் தடைக்கும் இராணுவம் காரணமாக இருக்கின்றமை, இப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையை மேலும் மோசமாக்கி இருப்பதோடு, இது புரிந்துணர்வு உடன்படிக்கையினை இராணுவம் மீறும் செயலாகவும் உள்ளது.

மேலும் மணற்காட்டுப் பிரதேசம் தொடக்கம் குடத்தனை வரையான கரையோரப் பிரதேசம் முழுவதும் முளவேலி இடப்பட்டிருப்பதோடு, அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத் தொழிலாகிய கடற்றொழிலினையும் சுதந்திரமான முறையில் மேற்கொள்ளவிடாது இராணுவம் பல தடைகளை விதித்து வருகின்றமையும் மிகவும் கண்டிக்கப்படவேண்டிய விடயமே.

உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே நிலைகொண்டுள்ள படையினரை மாற்றும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக வடமராட்சி கிழக்கில் பொற்பதிக்கிராமத்தில் பாரிய இராணுவத்தளம் அமைக்கப்படுவதாக இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்திருப்பது எம்மக்களை அதிருப்தியில் ஆழ்த்தி இருப்பதோடு, வடமராட்சி கிழக்குப் பிரதேசம் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குகென ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடமா என்ற கேள்வியினையும் எழுப்பியுள்ளது.

அண்மையில் தமிழ் மக்களினால யாழ். பல்கலைக்கழக மைதானத்தில நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வின் கோஷமாகிய "இராணுவமே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள், நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்ல வேண்டும் ("We the Tamils call Forces to get back to their home so that we could resettled in our home. We want our homeland") என்ற எம் மக்களின் அபிலாஷைக்கு இராணுவத்தின் மேற்படி முகாம்கள் அமைக்கும் நடவடிக்கை விரோதமாகவே அமைந்துள்ளது.

எனவே உடனடியாக இப்பகுதியில் இராணுவத்தளம் அமைக்கும் நடவடிககையினை இராணுவத்தினர் கைவிட வேண்டுமெனவும் இல்லையேல் இது ஒரு பாரிய வெகுஜனப் போராட்டத்திற்கு வழிவகுத்துச்செல்லும் என்று கூறுவதோடு இந்நடவடிக்கையினை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சட்டவிரோதமாக மின் பெற்ற 8 பேருக்கு ரூ. 48,000 அபராதம்

யாழ்ப்பாணம்,ஒக.1

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 8பேருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் 48ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

அச்சுவேலி மற்றும் ஆவரங்கால் பகுதிகளில் இரவு நேரங்களில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரின் தொகை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளமையால் வீட்டு மின்பாவனையாளர்கள் பலத்த இடையூறுகளை எதிர்நோக்குவதாக இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டு வந்தது.

அதனையடுத்து, அப்பகுதிகளில் இலங்கை மின்சாரசபை அதிகாரிகளும அச்சுவேலிப் பொலீஸாரும் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அப்போது திருட்டு மின்சாரம் பெற்ற எட்டுப்பேர் அவர்களிடம் வசமாகச் சிக்கினர்.

கைதுசெய்யப்பட்ட எட்டுப் பேரையும் அச்சுவேலிப் பொலீஸார் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது அவர்களை தலா 6ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார். (ம-5)

# கிராமங்கள் தோறும் மிதிவெடி விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,ஒக.1

வெடிபொருள்களினால் ஏற்படும் ஆபத்துக்களை மக்களுக்கு எடுத்துக் கூறும் கருத்தரங்குகளை மிதிவெடி அபாயக் கல்வித்திட்டப் பிரிவினர் கிராமங்கள் தோறும் நடத்தி வருகின்றனர்.

கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் உட்பட இனந்தெரியாத வெடிபொருள்களை உதாசீனம் செய்வதாலும் அவற்றைத் தீண்டுவதாலும குடாநாட்டில் சிறுவர்கள் முதல் பெரியோர் வரை உயிரிழப்புக்களையும் அங்க இழப்புக்களையும் சந்திக்க நேரிடுகிறது.

இவை தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கவும் பலவித கருத்துக்களை எடுத்துக்கூறவுமே இக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருவதாக மிதிவெடி செயற்பாட்டுத் திட்ட அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்குள் பிரவேசிப்பது, அங்குள்ள பொருள்களை எடுக்க முற்படுவது உட்பட பல காரணங்களால் மக்கள் ஆபத்தை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-10-6)

## முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.1

வலி.வடக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம், இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து ஆசிரியர்களையும் கலந்துகொள்ளும்படி வலி.வடக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (ஐ-9)

## மிதிவெடி பாதிப்புக்கு சர்வோதயம் நிதி-உதவி

யாழ்ப்பாணம்,ஒக.1

தென்மராட்சிப் பகுதியில் மிதிவெடிகளால் அங்கவீனமானவர்களுக்கு சர்வோதயம் அமைப்பின் யாழ். மாவட்ட அலுவலகம் நிதி உதவிகளை வழங்கியுள்ளது.

மட்டுவில், சரசாலை, சாவகச்சேரி ஆகிய இடங்களைச் சேர்ந்த மிதிவெடிப் பாதிப்புக்குள்ளான சுமார் 25பேருக்கு தலா 12ஆயிரம் ரூபா வீதம் நிதி உதவி வழங்கப்பட்டது.

கோப்பாய் பிரதேசத்தில் மிதிவெடியினால் பாதிக்கப்பட்ட 20பேருக்கு எதிர்வரும் 4ஆம் திகதி இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளது. (ம-ரி)

## குழந்தையின் காப்பு ஆலயத்தில் அபகரிப்பு

வலி.வடக்கு,ஒக.1

தாயின் தோள்மேல் சாய்ந்து உறங்கிய கைக்குழந்தையின் கையில் அணிவிக்கப்பட்டிருந்த தங்கக்காப்பு அபகரிக்கப்பட்டது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் இரண்டாம் ஆடிச் செவ்வாய் திருவிழாவின்போது இச்சம்பவம் இடம்பெற்றது.

ஆடிச்செவ்வாய் உற்சவங்களின்போது அதிக எண்ணிக்கையான அடியார்கள் ஆலயத்தில் திரள்வதாகவும் -

ஆகவே, அதிகளவில் நகைகளை அணிந்து செல்வதை தவிர்ப்பதன் மூலம் இத்தகைய களவுகளை தவிர்க்க முடியும் என்றும் -

ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஒ-86)

# ஆடிப்பூர நாளில் அம்பிகையைப் பணிந்து தேடிச் சரண்புகுந்தே தரிசனம் காண்போம்

இன்று ஆடிப்பூரம். இந்த ஆடிப் பூர நன்னாளானது அம்பிகைக்குரிய பொன்னாளாகும். அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியான அன்னை



ஆதிபராசக்தி அம்பிகையின் ருது சாந்தி வைபவம் வெகு விமரிசையாக இன்று வெள்ளிக்கிழமை அம்மன் ஆலயங்களில் இடம்பெறும்.

### அருள்சுரக்கும் நாள்

இப்பரந்த நிலவுலகுக்கெல்லாம் தாயாக விளங்குகின்ற லோகமாதாவாகிய அன்னை தனது அருட்பிரவாகத்தை அகிலமெங்கும் அண்ட சராசரங்களெல்லாம் பரிணமிக்கும்படி அருள்சுரக்கும் நாள் ஆடிப்பூரம்.

உலகைக் காக்கும் பரம்பொருளாக விளங்குகின்ற சிவபெருமான் ஆன்மாக்களின் மீது கொண்ட பெருங் கருணையினால் பஞ்சகிருத்திய நடனம் செய்கின்றார்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந் தொழில்களையும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன ஆகிய மூர்த்தங்களைக்கொண்டு செய்விக்கின்றார்.

ஆனால், இந்தத் தொழில்களைச் செய்வதற்கு சக்தி வேண்டும். சிவபெருமான்கூட சக்தி இல்லாமல் இயங்க மாட்டார்.

மின்சக்தி பாய்ந்தால்தான் வெளிச்சம் கிடைக்கும். மின்சாரம் ஊடுருவினால்தான் ஒலிவாங்கி இயங்கும். ஒலிபெருக்கி கேட்கும். வானொலியோ, தொலைகாட்சியோ மின்சாரம் இல்லாமல் தொழிற்படமாட்டாது.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் "மின்" மிக முக்கிய தேவையாகவும் அடிப்படைச் சக்தியாகவும் மிளிர்கின்றது. அதேபோல எல்லாவற்றுக்கும் மேலாக சகலதையும் ஆட்டிப் படைக்கும் ஆதிபராசக்தியாக அன்னையின திருவருட்சக்தி விளங்குகின்றது.

"சக்தி இருந்தால் செய்: இல்லையேல் சிவனே என்று இரு" என்ற மகாவாக்கியம் இங்கு நினைவுகூரத் தக்கது.

### யாவும் சக்திமயம்

எல்லாவற்றையுமே பெண்ணாக உருவகிப்பது நம்முன்னோர் வழக்கமாகும். கல்விக்கு சரஸ்வதியையும், செல்வத்துக்கு இலக்குமியையும், வீரத்துக்கு துர்க்கையையும் கொண்டு வழி

சிவநெறிக் கலாநிதி
**இராசையா ஸ்ரீதரன்**

பாடியற்றுவது நமது சைவசமயம்.

நிலத்தைக்கூடப் பூமாதேவி என்று பெண்ணாகத்தான் உருவகித்துள்ளனர். நித்திரையும் நித்திராதேவி என்றுதான் வர்ணிக்கப்படுகிறது. இப்படி சர்வமும் சக்திமயமாக விளங்குவது நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

### அதிவிசேட தினம்

இன்றைய ஆடிப்பூரம் வெள்ளிக்கிழமை நிகழ்வதால் இது ஓர் அதத விஷேசம் உடைய நாள்.

அம்பிக்கைக்குரிய தினம் வெள்ளிக்கிழமை. சுக்கிரவாரத்தில் அம்பாளைக் கண்டு தரிசிப்பவர்கள் சகல சௌபாக்கியங்களும் கைவரப்பெற்று பூலோகத்தில் சுகமாக வாழ்வர்.

*"பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே"* என்று அழகாகக் கூறுகின்றார் அபிராமிப்பட்டார். நம்மையெல்லாம் காத்து ரட்சிக்கின்றவளாகிய அம்பிகையைச் சரண்புகுந்து விட்டால் அவள் நம்மைக கைவிடமாட்டாள். நம்பி அவளைக் கைதொழுதால் அம்பிகை நிச்சயம் அருள்புரிவாள். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்தவள் அவள். அவளுடைய தனிப்பெருங் கருணையினால்தான் நாம் இப்பூவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

### கோடி நன்மை தேடிவரும்

அம்பிகையை இந்த ஆடிப்பூர நாளில் தேடிச்சென்று நாடித் துதித்து நின்றால் கோடி சூரியப்பிரகாசம் வாழ்வில் கிட்டும் என்பது ஆன்றோரது நம்பிக்கை.

"தனந்தரும் கல்விதரும் ஒரு நாளுந்தளர்வறியாமனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா இனந்தரும்..." என்று நாம் உண்மையான பக்தியுடன் அந்த அம்பிகையைப் பணிந்தால் கோடி நன்மை ஆடிப்பூரத்தில் தேடிவரும். நாடித்தேடித் திரிவார்பால் ஞானத்தாயாக நின்று திருவருள் புரியும் அன்னையை நாம் அடிதொழுது அருள்பெற பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்கவேண்டும்.

இந்த புண்ணிய பூமியில் மானிட ஜென்மம் எடுத்தவர்களாகிய நாம் உலக இன்னல்கள், இடுக்கண்கள், துன்பங்கள், துயரங்கள் முதலியவற்றிலிருந்து விடுபடுவதற்காக அம்பாள் தோற்றம் எடுத்தநாள் தான் இந்த ஆடிப்பூரமாகும் என்று கருதுவாருமுளர்.

ஆகவே, இந்த ஆடிப்பூர நன்னாளில் அம்பிகையைக் குறித்து விரதம அனுட்டித்து உபவாசமிருந்து அம்பாள் தோத்திரங்களைப் பாராயணஞ் செய்து தேவியின் திருவருளுக்குப் பாத்திரமாகி பேரின்பப் பெருவாழ்வுக்கு வழிகோலுவோமாக. ★

# இலங்கை வங்கிக் கிளைகளில் சேவைக்கட்டணம் அதிகரிப்பு

அச்சுவேலி,ஓக.1

இலங்கை வங்கிக் கிளைகளில் நடைமுறைக்கணக்கு மீதான சேவைக் கட்டண விகிதங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

வங்கிகளில் நடைமுறைக்கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களினதும், சங்கங்கள், நிறுவனங்கள், அமைப்புக்களினதும் கணக்கில் குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாக வரவு மீதி அல்லது பற்றுமீதி இருந்தால் சேவைக்கட்டணம் அறவிடப்பட்டு வநதது. இந்தச் சேவைக்கட்டண விகிதம் தற்பொழுது அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைவங்கி தனிப்பட்ட கணக்கு அல்லது சங்கங்கள், அமைப்புக்களின் நடைமுறைக்கணக்கில் மாதாந்தம் 2ஆயிரத்து 500ரூபாவுக்கு குறைவாக வரவுமீதி அல்லது பற்றுமீதி இருக்கும் இடத்து மாதாந்த சேவைக்கட்டணமாக 50ரூபாவும் -

வியாபாரக்கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளரின் நடைமுறைக் கணக்கில் 5ஆயிரம் ரூபாவுக்கு குறைவாக பற்றுமீதி அல்லது வரவு மீதி இருந்தால் மாதாந்த சேவைக்கட்டணமாக 500ரூபாவும் - அறவிடப்படும் என்று அறிவித்துள்ளது.

இந்த புதிய நடைமுறை 2003ஆம் ஆண்டு ஜுலை மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுவதாக வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-11-185)

# எழுவைதீவில் ஏற்படவிருந்த கோஷ்டி மோதல் தவிர்ப்பு

ஊர்காவற்றுறை, ஓக.1

எழுவைதீவுப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இருகோஷ்டிகளுக்கிடையே இடம்பெறவிருந்த பெரும் மோதலொன்று அப்பகுதி சமூக அமைப்புக்களின் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

அப்பகுதியில் கிணறு வெட்டும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தொழிலாளி ஒருவரின் ஒரு தொகைப் பணம் காணாமற்போனதை அடுத்து இருவருக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு பின்னர் கோஷ்டி மோதலாக மாற முற்பட்டது.

கைகலப்பில் ஈடுபட்ட இருவரின் சமூகங்களும் கத்திகள், பொல்லுகள் மற்றும் தீப்பந்தங்கள் சகிதம் பெரும் மோதலுக்குத் தயாரானதாகவும் -

இதனையறிந்த அப்பகுதி சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் உடனடியாகத் தலையிட்டு மோதலைத் தடுத்து நிறுத்திவிட்டதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10-16)

# மஹரகம சிறை அறையில் தூக்கில் தொங்கிய சடலம்

கொழும்பு,ஓக.1

இலங்கை லொத்தர்சபை நடத்தும் சீட்டிழுப்பில் மோசடி செய்ததாகக் கூறிக் கைதுசெய்யப்பட்ட இளைஞரின் சடலம சிறையில் தூக்கில் தொங்கிய படி காணப்பட்டது.

இலங்கை லொத்தர்சபையால் நடத்தப்படும் அபிவிருத்தி அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களில் பரிசுபெற்ற சீட்டுக்களின் இலக்கங்களை இயந்திர சாதனமொன்றின் மூலம் பொறித்து லட்சக் கணக்கான ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக பொலீஸாருக்குத் தெரியவந்தது.

இதுதொடர்பாக காலியைச் சேர்ந்த பிரதீப்குமார(22வயது) என்ற இளைஞர் கடவத்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவர் மஹரகம சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் சிறை அறையில் தூக்கில் தொங்கியபடி அவரது சடலம காணப்பட்டது.

நீதிமன்றப் பணிப்பின்பேரில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த இவர், கடந்த 22ஆம் திகதி மஹரகம சிறைச்சாலைக்கு மாற்றப் பட்டதாகவும்-

இவரது மரணம் தற்கொலையாக இருக்கலாமென தாம் நம்புவதாகவும்-சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி)

## கண்ணிவெடி அகற்றும் பணி துரிதம்

யாழ்ப்பாணம்,ஓக.1

ஆனையிறவு கண்டி வீதியின் இருமருங்கிலும் கண்ணிவெடிகள் அகற்றும் பணி துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

கிளிநொச்சியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் பல வேறு அணிகளாக இப்பணிகளை மேற்கொண்டுள்ளார்கள். (ஒ-173)

## அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.1

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள நான்கு பாடசாலைகளில் உள்ள அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை, அராலி வடக்கு அ.மி.த.க. பாடசாலை ஆகிய வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை தரங்களைச் சேர்ந்தவர்களும் இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு I, வகுப்பு 2:I, வகுப்பு 2:II ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் இறுதிநாள் எதிர்வரும் 12ஆம் திகதி ஆகும். (ஒ-10)

# தெய்வீக ஸ்தலங்களில்




கோண்டாவில் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய உற்சவத்தில் திருமஞ்சக்கேடகம் கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலய முன்றிலை வந்தடைந்தபோது பூசை நிகழ்வு நடப்பதைப் படத்தில் காணலாம். (ஒ-49)



கல்வியங்காடு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவின்போது எடுக்கப்பட்ட படம் (ஒ-180)



கற்கோவளம் வீரபத்திரர் கோவிலுக்கான புதிய கட்டடத்துக்கு நிகொட் திட்ட இணைப்பாளர் ரீ.லங்காநேசன் அடிக்கல் நடுவதைப் படத்தில் காணலாம். (ஒ-173)



சரசாலை நுணாவில் சிதம்பரவிநாயகர் ஆலய மஹோற்சவத்தையொட்டி சரசாலை இந்து மன்றத்தினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப் பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவிகளில் ஒருவருக்கு ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர் ஆ.குணநாயகம் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஒ-117)

Browns Electronics

வாழ்வில் அதியுயர் மகிழ்ச்சி!

Quality இலாபம்

நம்பமுடியாத விலைகளில் உலகத்தரம்மிக்க உன்னதச் சாதனங்கள்

SHARP
14 அங்குல தொலைகாட்சிப் பெட்டி வாங்கினால்...
5 வருட உத்தரவாதம்
Cornell பிளென்டர் இலவசம்

SHARP
20/21/29 அங்குல தொலைகாட்சிப் பெட்டி வாங்கினால்...
5 வருட உத்தரவாதம்
Moulinex டோஸ்டர் இலவசம்

SHARP ES-60W
சலவை இயந்திரம்
ரூ.1000/- சேமியுங்கள்

SHARP SJK-21P
குளிர்சாதனப்பெட்டி
ரூ.2500/- சேமியுங்கள்
5 வருட உத்தரவாதம்

ELBA® EFSA 801
சலவை இயந்திரம் வாங்கினால்...
ELBA® ஸ்டீமர் அயன் இலவசம்

Sumeet DM 200
பிளென்டர்
ரூ. 650/- சேமியுங்கள்

SHARP WF-2100W
கசட் ரெக்கோடர்
ரூ.1000/- சேமியுங்கள்

ஹட்டன் நஷனல் தெதரு

பிறவுன்ஸ் உறுப்பத்திகளுக்கு இலகு தவணைக் கொடுப்பனவு ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்

பிறவுன்ஸ் உத்தரவாதப் பத்திரத்தை கேட்டுப்பெறுங்கள்

Browns Group of Companies
BG Browns Group Estd 1875

89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2225150

இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

TNT Grafix

---

உ
கணபதி துணை

## மங்களகரமான விற்பனை ஆரம்ப விழா-01.08.2003

வடமராட்சி மண்ணில் புதிதாக உதயமாகும்

# சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்

# Suvai Thendral Cream House

எனும் எமது ஸ்தாபனத்தின் விற்பனை ஆரம்ப வைபவம் இறைவன் திருவருள் துணைகொண்டு நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆடித் திங்கள் 16ஆம் நாள் இன்று (01.08.2003) வெள்ளிக்கிழமை (சதுர்த்தியும் ஆடிப்பூரமும் இணைந்த நன்னாள்) காலை 07.20 மணி தொடக்கம் 09.08 மணிவரையுள்ள சிங்க லக்கினமும் பூர நட்சத்திரமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்,

அருள்மிகு தென்புலோலி, புற்றளை சித்தி விநாயகர் ஆலய முன்றலில் எமது வியாபார ஸ்தாபனத்தின் விற்பனையை ஆரம்பித்து வைக்க எம்பெருமான் விநாயகப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளது.

சுவையின் தரச் சிறப்பை நோக்கிய தென்றலின் புதிய பயணம்
அதுவே சுவைத்தென்றலின் இனிய பயணம்
இணைந்திடுவீர் எம்முடன்
வாங்கி மகிழ்ந்திடுவீர்.

முக்கிய குறிப்பு:- இந்த அழைப்பை என் அன்புக்கும், மதிப்புக்குமுரிய பெரியோர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுமாறு மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

உங்கள்
இல்லங்கள், பாடசாலைகள்
மற்றும்
பொது இடங்களில் நடைபெறும்
மங்களகரமான வைபவங்களில்
விருந்துபசாரத்திற்கு
முன்னரோ அல்லது பின்னரோ
பரிமாறிக் கொள்ளத்
தேவையான சகல விதமான
ஐஸ்கிறீம்
மற்றும் குளிர்பான வகைகளை
ஓடர் கொடுத்து
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய இடம்
**சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்.**

நிறுவன முகவரி :
**சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்**
சாரையடி, புலோலி தெற்கு,
புலோலி.
☎ 0777-564820

கே.வி. சூரியகுமாரன்.
நிறுவன உரிமையாளர்

(C/29194)

# சார்ஜா, மொரோக்கோ போட்டிகளிலிருந்து இலங்கைக் கிரிக்கெட் அணி விலகுகிறது

"சார்ஜா, மொரோக்கோ ஆகிய இடங்களில் நடைபெறும் 8 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து இலங்கை வாபஸ் பெற்றுள்ளது. "டபிள்யூ.எஸ்.ஜி.நிம்பஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை சார்ஜா, மொரோககோ போட்டிகளில் பங்குபற்றாதிருப்பதற்கு இலங்கை கிரிக்கெட் கட்டுபாட்டுச் சபை தீர்மானித்துள்ளது."

- இவ்வாறு இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை வெளிநாடுகளில் ஒளிபரப்பும் உரிமையை டபிள்யூ.எஸ்.ஜி.நிம்பஸ் நிறுவனம் பெற்றிருந்தது.

2000 ஆம் ஆண்டில் கிரிக்கெட் சபையின் தலைவராக திலங்க சுமதிபால பதவிவகித்த காலத்தில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

ஆனால், திலங்க சுமதிபால தலைமையிலான கிரிக்கெட்சபை நிர்வாகம் கலைக்கப்பட்ட பின்னர், நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக்குழு, மேற்படி ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டு தாஜ் ரெலிவிஷன் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டது.

டபிள்யூ.எஸ்.ஜி.நிம்பஸ் நிறுவனம் உரிய தவணையில் பணம் வழங்காமையே இதற்குக் காரணம் எனக்கூறப்பட்டது.

தமது ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்த நிம்பஸ் நிறுவனம், இலங்கைக் கிரிகெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிராக சிங்கப்பூர் நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடுத்தது. சில மாதங்களுக்கு முன் இவ்வழக்கில் நிம்பஸ் நிறுவனத்துக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் 25ஆம் திகதிக்கு முன்பாக ஒரு கோடி 10 லட்சம் டொலர்களை (சுமார் 110 கோடி ரூபா) நிம்பஸ் நிறுவனத்துக்கு வழங்குமாறு இலங்கைக் கிரிகெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையில், கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக மீண்டும் பதவியேற்றுள்ள திலங்க சுமதிபால, நிம்பஸ் நிறுவனத்துடன் பேசி இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு முற்பட்டு வருகிறார்.

தாஜ் ரெலிவிஷன் நிறுவனத்துக்கு நிலைமையை விளக்கி அந்நிறுவனதத்துடனான ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டு, நிம்பஸ் நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்வதற்கும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முன்வந்துள்ளது.

இந்நிலையில் நிம்பஸ் நிறுவனத்துக்கு தமது விசுவாசத்தை வெளிபபடுத்தும் விதமாக மொரோக்கோ, சார்ஜா போட்டிகளிலிருந்து விலகவும் இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

சார்ஜா, மொரோக்கோ கிரிக்கெட் மைதானங்கள் ஐக்கிய அரபு எமிரேட்ஸை சேர்ந்த வர்த்தகப் புள்ளியான அப்துர் ரஹ்மான் புகாதிருக்குச் சொந்தமானது. தாஜ் ரெலிவிஷன் நிறுவனமும் அவருக்குச் சொந்தமானதே. இந்நிறுவனமே சார்ஜா, மொறோக்கோ ஆகிய இடங்களில் நடைபெறும் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## தாச்சிச் சுற்றுப் போட்டியில் அண்ணா வி.கழகம் சம்பியன்

வலி.வடக்கு,ஓக.1

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இவ்விறுதி ஆட்டத்தில் இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகமும், இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் மோதின.

விளையாட்டுத் தொடங்கிய சில நிமிடங்களில் அண்ணா விளையாட்டுக் கழகம் ஒரு பழத்தைப் பெற்றுக்கொணடது. அதனைத் தொடர்ந்து இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும் ஒரு பழத்தைப் பெற்றுக்கொண்ட நிலையில் முதல்பாதி ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் பலமான போட்டியில் ஈடுபட்டன.

ஆனால், அண்ணா விளையாட்டுக் கழகம் இரண்டாம் பாதி ஆட்டத்தின் இறுதி நேரத்தில் இரு பழங்களைப் பெற்றுக்கொண்டது. இதன் மூலம் அண்ணா விளையாட்டுக் கழகம் 3-1 என்ற பழக்கணக்கில் கலாஜோதி விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

(ஒ-5-86)

# விளையாட்டு

## உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம் உதைபந்தாடப் பயிற்றுவிப்பாளர்களுக்கும், வீரர்களுக்கும் உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள இப்பயிற்சி முகாமில் பாடசாலை உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கும், அதனைத் தொடர்ந்து 13 வயது,16 வயதுப் பிரிவினர்களுக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி முகாமில் பங்குபற்ற விரும்பும் பயிற்றுவிப்பாளர்களையும்-வீரர்களையும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், செயலாளர், யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கம், கொக்குவில் என்ற முகவரிக்கு தமது பெயர், விவரங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைககுமாறு செயலாளர் பொ.கமலநாதன் கேட்டுள்ளார்.

(ஒ-5)

## விளையாட்டு செய்திகள்

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அனைத்துப் பதிவுசெய்த, பதிவுசெய்யாத கராத்தே கழகங்களின் ஆசிரியர்களுக்கும் கராத்தே பயிலும் அனைத்து மாணவர்களுக்குமான முககிய சந்திப்பு ஒன்று எதிர்வரும் 3ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கராத்தே பயிலும் மாணவர்களின விவரங்களுடன் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.1

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் வலைப்பந்தாட்ட பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 2ஆம், 3ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட கழகங்களிலிருந்து தலா ஒவ்வொரு வீராங்கனையை அனுப்பிவைக்குமாறும்-

இதற்கு வருகைதர விரும்பும் பயிற்சியாளர்கள் தமது பெயரை இன்று வெள்ளிக்கிழமைக்கு முன் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.கே. ரூபசிங்கத்திடம் அல்லது யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறையைச் சேர்ந்த ராதை அருளம்பலத்திடம் தமது விவரங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறும் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் பூ.மைதிலி கேட்டுள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலுள்ள வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களையும், மத்தியஸ்தர் பரீட்சையில் தோற்றி சித்தியடையாதவர்களையும் இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (5)

★ ★ ★

வலி.வடக்கு,ஓக.1

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், யாழ். மாவட்ட உதைபந்தாட்ட முன்னணி அணிகளுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வதிரி டயமண்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

(86)


## வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர்

உயர்திரு.கே.தேவராஜா

அவர்கள் சமாதான நீதிவானாக பதவியேற்றதையிட்டு இறும்பு,தெய்துவகுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பண்ணாகம் சோமசுந்தரம்
திருச்செல்வம்
தொழிலதிபர்,
NATHAN INN

441, Galle Road
Colombo-4
Tel:01-598420.

(C29237) (32)

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் உணவகத்திற்கு பின்வருவோர் தேவை.

- ★ ரீ மேக்கர்
- ★ உணவு பரிமாற்றுவோர் (Waiter - மும்மொழிகளும தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை)
- ★ கொத்துரொட்டி தயாரிப்பாளர்
- ★ மேலைத்தேய, கீழைத்தேய, இந்திய உணவு தயாரிப்பாளர்கள்
- ★ கணக்காளர் (A/L வர்த்தகமும், அனுபவமும்)

மாலை 5மணிக்கு பின் நேரில் வரவும்.

சண் ஜெய பூட் லாண்ட்
இல.414, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Shan Jaeya Food land
No. 414, Hospital Road,
Jaffna.

(20926) (29-18-12)


# வீதியில் சென்ற இளம் பெண்ணிடம் சேஷ்டை புரிந்தவர் சிக்கினார்

## கலாசாரம் பேணுவோர் மடக்கினர்

மானிப்பாய்ப் பகுதியில் வீதியால் சென்ற இளம் பெண்ணிடம் சேஷ்டை புரிந்த இளைஞன் கலாசாரம் பேணும் இளைஞர்களிடம் மாட்டிக் கொண்டார். நேற்று நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இளைஞன் ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவராவார்.

ஓட்டோ ஒன்றில் சென்று கொண்டிருந்த பிரஸ்தாப இளைஞன் வீதியில் சென்ற பெண் மீது அங்கச் சேஷ்டை புரிந்ததாகவும் -

அச்சமயம் அந்த வழியால் வந்த கலாசாரம் பேணும் இளைஞர்கள் அவரை மடக்கிப் பிடித்ததாகவும் - கூறப்பட்டது.

# சமய சந்நிதிகளில்

கோப்பாய்,ஓக.1

நீர்வேலி, மாசுவன் ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலய ஆடிப்பூர உற்சவ நூல் வெளியீடு இன்று மாலை 7.00 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் வெளியீட்டுரையை கு.தியாகராஜா குருக்களும், மதிப்பீட்டுரையை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும் சிறப்புரையை ச.லலீசனும் நிகழ்த்துவர்.(ஒ-10-72)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.1

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று காலை 7.16 மணி தொடக்கம் 9.04 மணி வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

(ஒ-10)

★ ★ ★

சங்கானை,ஓக.1

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

(ஒ-10-29)

★ ★ ★

சங்கானை,ஓக.1

வட்டு. கிழக்கு, திரட்டிப்பனை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

(ஒ-10-29)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.1

கரணவாய் மூத்த விநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் ரதோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாள் திங்கட்கிழமையும் இடம்பெறும்.

(ஒ-10-170-173)

★ ★ ★

தெல்லிப்பழை,ஓக.1

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது. (ஒ-10-150)

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஓக.1

சண்டிலிப்பாய் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ-10-135)

★ ★ ★

தென்மராட்சி,ஓக.1

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லீகோரியார் தேவாலய நவநாள் உற்சவத்தில் நாளை சனிக்கிழமை மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூஜையும் இடம்பெறும். மறுநாள் காலை திருநாட்பாடற்பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம் பெறவுளளன. (ஒ-10-117)

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஓக.1

பண்டத்தரிப்பு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 11ஆம் திகதி திருஊஞ்சல் உற்சவமும், 12 ஆம் திகதி சங்காபிஷேகமும் பூங்காவனமும் நடைபெறும்.

(ஒ-10-135)

# மரண அறிவித்தல்கள்

## அருட்சகோதரி மேரி எவறிஸ்ரா டோமினிக் திருக்குடும்ப சபை

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி எவறிஸ்ரா டோமினிக் 30.07.2003 புதன்கிழமை பள்ளிமுனை திருக்குடும்ப இல்லத்தில் இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.08.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மன்னார் திருக்குடும்ப இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, தூய செபஸ்ரியார் பேராலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியின் பின்னர் மன்னார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ்
யாழ்.திருக்குடும்ப மாகாணத்தலைவி.

*திருக்குடும்ப மாகாண இல்லம், யாழ்ப்பாணம்.* (20931) (32-16-18-29)

## சீவரட்ணம் கனகசிங்கம்

(ஓய்வுபெற்ற சிறுவர் நன்னடத்தை பாதுகாவலர் அதிகாரி)

குப்பிளான், காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரட்ணம் கனகசிங்கம் நேற்றுமுன்தினம் (30.07.2003) புதன்கிழமை ஹொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சீவரட்ணம் தம்பதிகளின் மகனும கிருஸ்ணகுமாரியின் (கண்ணாக்கா - கல்வித் திணைக்களம், யாழ். வலயம்) அன்புக் கணவரும் கஸ்தூரி (ஆசிரியை, ஊரெழு கணேச வித்தியாசாலை, பட்டப்படிப்பு கலைப்பிரிவு மாணவி), முரளிதரன், வாசுகி (யாழ். இந்து மகளிர் கல்லூரி, விஞ்ஞானப்பிரிவு 2005 A/L மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலாதேவியின் (ஜேர்மன்) சகோதரரும் காலஞ்சென்ற முத்துகிருஸ்ணன் மற்றும் இராசலட்சுமியின் மருமகனும் கந்தையா, கிருஸ்ணவேணி, கிருஸ்ணபவானி (சுவிஸ்), கிருஸ்ணதயாளினி (பிரான்ஸ்), கிருஸ்ணராதா (கொழும்பு) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி (கண்ணாக்கா),
பிள்ளைகள்.

*'அன்னை இல்லம்'*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*
(20930) (29-18-16-29)

## பாலசுப்பிரமணிய சர்மா ஜெனதீப சர்மா

அல்வாய், திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வரணியையும் வரியப்புலத்தினையும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணிய சர்மா ஜெனதீப சர்மா அவர்கள் 28.07.2003 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 29.07.2003 செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் பங்கோம்படி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.குகனேசக்குருக்கள்
(மைத்துனர்).

*திக்கம்.* (C29236) (32-18-16-29)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## புத்தகங்கள்

27-07-2003 உதயனில் கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய வானொலி நாடகம் பற்றிய கட்டுரையை வாசித்தீர்களா? அவரது சிறுகதைத் தொகுதி யாழ்ப்பாணம் ரூபா 50/- நாடக நூல்கள் 1) யாழ்ப்பாணமா? கொழும்பா? 2) எங்கள்நாடு. (20890)

## விற்பனைக்கு

தற்சமயம் பாவனையிலுள்ள Gestetner-250 (Legal Size) ஓவ் (f)செற் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.0777 481164, 0777 732296 (20983)

அண்மையில் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட NP - HH xxxx தொடரிலக்கமுடைய பஜாஜ் (BAJAJ) முச்சக்கர வண்டி (3 சில்லும் பிறேக்) 2003 மொடல் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 - 6079254. (20920)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடா பிரஜாவுரிமையுள்ளவரும் தற்போது இங்கு சொந்தமாகத தொழில் புரிபவருமான செவ்வாய்க் குற்றமற்ற, 40 வயது மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் படத்தையும் இணைத்து அனுப்பவும். விளம்பர இல. 1967, C/o உதயன், யாழ்ப்பாணம். (20907)

## தவறிவிட்டது

'பாபாஜி இல்லம்', உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த இராமநாதன் சுரேஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை(இல.763522377V), தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (20901)

தரம் 5 ஆங்கிலப் புத்தகத்தினுள் பிறப்புச் சான்றிதலும் சில ஆவணங்களும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலிருந்து இருபாலைச் சந்திக்கு செல்லும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இ.ஜெயக்குமார், 161, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (20911)

## பயிற்சிக் கருத்தரங்கு

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் மகளிர் அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்து நடத்தும் பெண்கள் தலைமைக்கான சமூக வலுவூட்டல் பயிற்சிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இன்று பி.ப.2மணிக்கு முன்னர் மூளாயிலுள்ள சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவன அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# தென்மராட்சியில் 175 வீடுகளை அமைக்க ஜி.ரி.இசற் நடவடிக்கை

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 13 கிராம அலுவலர் பிரிவுகளில் 175 வீடுகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினா அமைத்துக் கொடுக்கவுள்ளனர்.

நாவற்குழி மேற்கு, கோயிலாக்கண்டி, கோயில் குடியிருப்பு, மண்டுவில், நுணாவில் மத்தி, கைதடி நுணாவில், தென்மட்டுவில், மட்டுவில் நுணாவில், மட்டுவில் மத்தி, மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம், சரசாலை தெற்கு, தாவளை, இயற்றாலை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலேயே இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## ஒன்பதாம் ஆண்டின் துயரலைகள்



அமரர்

**தம்பிஜயா ரவிச்சந்திரன்**

(ராசன்)

தோற்றம் 05-01-1968 ஐங்கரன் பாதம் 10-08-1994

திதி: 01.08.2003

*குடும்பத்துக்கு ஒளி ஏற்றிய குத்துவிளக்கே!*
*எமைக் கலங்க வைத்து விண்ணுலகம் சென்றதேனோ?*
*அன்பு முகம் ஒளிவீச கருணைக்கடல் வழிகாட்ட*
*கடந்த கால நினைவுகளை எண்ணி ஏங்கித் தவிக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*"நவேந்திரகிரி"*
*இணுவில் மேற்கு, இணுவில்.* (20885 (24-14-16) - குடும்பத்தினர்.

## மோட்டார் சைக்கிள், அச்சக பழைய எழுத்துக்கள் (ஈயம்) ஏல விற்பனை

வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்குச் சொந்தமான பாவனையிலுள்ள 500-0709 இலக்கம் உடைய எம்.டி.90 ஹொண்டா இன மோட்டார் சைக்கிள் மற்றும் அச்சக பழைய எழுத்துக்கள் (ஈயம்) 250 கிலோகிராம் என்பன 04.08.2003 திங்கட்கிழமை பகல் 12.30 மணிக்கு இல. 499, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சமாச அச்சகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவற்றைப் பார்வையிட விரும்புவோர் பணிமனை வேலைநாள்களில் பார்வையிடலாம் என்பதுடன், மேலதிக விவரங்களையும் அறிந்துகொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்
வடமாகாண தெ.ப.பொ.கூ.ச.சமாசம்
இல.52, சோமசுந்தரம் லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(C/29225) (21-15-19-25)





உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C-26637)


## தவறிவிட்டது

து.உதயகுமார் என்பவரது காப்புறுதிப்பத்திரமும் ஒரு தொகைப் பணமும் ராஜா தியேட்டருக்கும் வல்லை நாற் சந்திக்கும் இடையில் 29.07.2003 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வல்வெட்டித்துறை வேம்படியில் ஒப்படைக்கவும்.சன்மானம் வழங்கப்படும். T.P: 226-3298 (20874)(21-15-19)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2822552 இருந்து
2840879 வரை
சீட்டிழுப்பு இல. 1422
திகதி 30.07.2003




## வெற்றி எண்கள்

**03 06 39 46 55** போனஸ் எண் **24**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.1,500,000/-** வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 103 | 10,000/- | 1,030,000/- |
| 3 | 5,685 | 500/- | 2,842,500/- |
| 2 | 96,380 | 20/- | 1,927,600/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 117,747 | 10/- | 1,177,470/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,577,570/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.1,500,000/-**

தொடர் இல. 3807930க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 02ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2823403-6-96
2824521-7-62
2838503-6-21
2829744-6-42
2835571-7-20

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர்
அமரர் சைவப்புலவர் ஆ. இரத்தினசபாபதி
அவர்களின் பேர்த்தியும்
திரு. திருமதி ரஞ்சன் அருசூயா
தம்பதிகளின் புதல்வியுமான

**செல்வி ஆரணி ரஞ்சன்**

(திருகோணமலை புனித மரியாள் கல்லூரி)

அவர்கள் வடகிழக்கு மாகாண தமிழ்மொழித்தின எழுத்தாக்கப் போட்டியில் கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் ஆகிய போட்டிகளில் முதலாமிடம் பெற்றுத் தேசிய மட்டத்திலான போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

"திருவள்ளுவர் அகம",
வதிரி, கரவெட்டி.
(20908) (21-15-19-26)

இ.உமாசங்கர். இ.சிவசங்கர்.
இ.உதயசங்கர். இ.பிரபோசங்கர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட்டுக்கோட்டையைச் சேர்ந்த
உயர்திரு.
**தம்பிராஜா சிவலிங்கம்**
(இளைப்பாறிய
சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர்,
யாழ்.போதனா வைத்தியசாலை)

அவர்கள் 25.06.2003 அன்று மாவட்ட நீதிபதி திரு.பா சுப்பிரமணியம் அவர்களின் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையை இட்டு அவரை இன்று 62 ஆவது அகவையில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*சங்கரத்தைச் சந்தி,*
*வட்டுக்கோட்டை.* (20918) (21-15-19-25)

~ சுட்டி பாம் சென்ரர்.



மட்டக்களப்பு கரடியனாறில் உள்ள விடுதலைப் புலிகளின் 'மீனகம்' படைத் தளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாவீரர் நினைவுத் தூபியை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் நாடாவெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# யூனியன் கல்லூரி மாணவருக்கு கொடிநிறக் காலுறை அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஓக.1

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களுக்கு பாடசாலைக் கொடி நிறத்திலான காலுறைகளை பாடசாலை நிர்வாகம் அறிமுகப்படுத்தி உள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

இம்மாத முற்பகுதியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன் என்று கூறிக்கொண்டு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் உற்சவத்தின்போது இராணுவ நிலைகளைப் பார்வையிட்ட இளைஞர் ஒருவர் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு நெருக்கடிகளை மாணவர்கள் எதிர்நோக்க நேரிட்டது.

இந்நிலையிலேயே யூனியன் கல்லூரி மாணவர்களை இலகுவில் இனங்கண்டு கொள்வதற்கு வசதியாக மேற்சட்டைப் பையில் சின்னம் மற்றும் கழுத்துப் பட்டியுடன் மேலதிகமாகக் காலுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத அப்பாடசாலை ஆசிரியர்கள் கூறினர்.

இதேநேரம், மாணவர்களும் பெற்றோர்களும் தம்மீது சுமத்தப்படும் மறைமுகமான சுமையென இதனைக் கருதுவதாகவும் கூறப்படுகிறது.(ஒ-86)

# மீனவர் பிரச்சினைகளை ஆராய பருத்தித்துறையில் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்.குடாநாட்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான முக்கிய கூட்டம் ஒன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையில் அமைந்துள்ள 524ஆவது படைத்தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள கூட்டத்தில் மீனவர்களுக்குப் படையினரால் ஏற்படும் பிரச்சினைகள், இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவது போன்றவை விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மீனவர் சங்கப் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளுமாறு கண்காணிப்புக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இராணுவ கடற்படை அதிகாரிகள் மற்றும் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-8)


## யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
### பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

காலம்: 16.08.2003 சனிக்கிழமை மு.ப. 3.30
இடம்: யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

நிகழ்ச்சி நிரல்:

1. இறைவணக்கம்.
2. தலைமை உரை.
3. செயற்பாட்டறிக்கை - செயலாளர்.
4. நிதி அறிக்கை - பொருளாளர்.
5. பாடசாலையில் செயற்படுத்த வேண்டிய பணிகள்.
6. புதிய நிர்வாக சபை தெரிவு.
7. இறைவணக்கமும் நிறைவும்.

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.ந.வித்தியாதரன்
தலைவர்.

திரு.அ.அருள்வேல்
செயலாளர்.

குறிப்பு: சங்கத்தில் அங்கத்துவம் பெறவிரும்புவோர் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும். (C/29228) (25-24-15-11)



## ஈராண்டில் உமை நினைக்கையில்....

மலர்வு 24 - 02 - 1952



உதிர்வு 01 - 08 - 2001

அமரர்
**V.M.ஜெறாட் பீற்றர்சன் J.P.**

அன்பின் ஆரணங்கே
ஆண்டுகள் பல சென்றாலும்
அடியவர் நாம் உமை
மறவோம் என்றும்!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

38, சென். பற்றிக்ஸ் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(20919) (25-24-15-11)


## பொருண்மியம் அனுசரணையுடன்
# கிளிநொச்சி - முல்லைத்தீவில் கால்நடை அபிவிருத்தித் திட்டம்

அச்சுவேலி,ஓக.1

கால்நடை வளர்ப்பு விசேட அபிவிருத்தித்திட்டம் கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கால்நடை வளர்ப்பில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளை நிவர்த்தி செய்து மேம்படுத்துவதற்கு ஏற்புடைய முறையில் "கால்நடை வளர்ப்பு விசேட அபிவிருத்தித் திட்டம்" நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து இத்திட்டத்தை செயற்படுத்தவுள்ளன.

இந்தத் திட்டத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு யாழ் மாவட்டத்தில் இருந்து ஆறு குழுக்கள் சுழற்சி முறையில் கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சென்று பணியாற்றவுள்ளன.

சுழற்சி முறையில் செல்லவுள்ள இக்குழுக்களில் தலா ஒரு கால்நடை வைத்தியர், இரண்டு கால்நடை விரிவாக்க போதனாசிரியர்கள் ஆகியோர் இடம்பெறுவர்.

இக்குழுக்கள் ஒவ்வொன்றும் இரண்டு வாரங்கள் அங்கு தங்கியிருந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்.

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட கால்நடை வளர்ப்பு விசேட அபிவிருத்தித் திட்டத்திற்கான நிபுணத்துவ ஆலோசனையை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் வழங்கும் அதேவேளையில், அதற்கான வளவசதிகள் அனைத்தையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-11)

### சந்தைக்கு வந்தோருக்கு சோதனை

சாவகச்சேரிச் சந்தையில் பொருள்கள் வாங்குவதற்கு ஆவணங்கள் எதுவுமற்ற மோட்டார் சைக்கிள்களில் வந்த முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் மோட்டார் போக்குவரத்துக் கண்காணிப்பு பொலீஸாரிடம் சிக்கிக்கொண்டனர். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையில் தலைக்கவசம், சாரதி அனுமதிப்பத்திரம், காபபுறுதி, வாகனவரி ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுமில்லாமல் வந்தோரே பொலீஸாரிடம் அகப்பட்டவர்களாவர்.(ஒ-117)






மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நேற்றுமுன்தினம் வேலை வாய்ப்புக்கோரி மட்டக்களப்புச் செயலகம் முன்பாக மறியற் போராட்டம் நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# மதகுருவுக்கு பிணை அனுமதி

வலி.வடக்கு,ஓக்.1

சங்கானையில் சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு இருந்த மதகுரு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் கடந்த செவ்வாய்க்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சட்டத்தரணிகள் இவரை பிணையில் விடும்படி நீதிமன்றில் கோரியதைத் தொடர்ந்து 10ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் செல்ல மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் அனுமதியளித்தார். (ஒ-86)

# பொலீஸ்காரர் சடலமாக மீட்பு!

கொழும்பு,ஓக.1

வவுனியா - மன்னார் பாதையில் அமைந்துள்ள 10ஆம் யூனிற் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ்காரர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இவர் தாம் வைத்திருந்த துப்பாக்கியினால் தற்கொலை செய்திருக்கக் கூடுமெனத் தாம் சந்தேகப்படுவதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.


**புலமைப்பரிசில்**
மாதிரிப் பரீட்சை
திங்கள் தோறும்
மாலை 4.00 மணிக்கு.
நாதன் அக்கடமி
மட்டுவில் தெற்கு.
(20917) (25-24-11-15)



**LOTUS**
COMPUTER MANAGEMENT SYSTEMS
கணனி தட்டெழுத்து பயிற்சி
(தமிழ் ஆங்கிலம்) 100/= மணிக்கு
பாடசாலை மாணவர்க்கான
கணனி பயிற்சி
(தொடர்ச்சியான வகுப்புகள்
பாடசாலை காலம் முழுவதும்)
மாதம் 200/= மட்டுமே
LCMS
Ramalingham Rd, Chava.
(பழைய AGA அலுவலகத்துக்கு முன்பாக)



## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1937 - 09 - 30



உதிர்வு 1999 - 08 - 15

**அமரர் முருகர் அழகரத்தினம்**
(ஓய்வுபெற்ற நில அளவை படவரைஞர்)

எமது எண்ண வானில் என்றும்
ஒளி வீசும் வண்ண நிலவே! - உங்கள்
பொன் மனமும் அன்புப் புதையலும்
எந்நாளும் எம் இதயத்தில் நிழலாடும்!

82, மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை

- மனைவி, பிள்ளைகள்.



## சேவை நலன் பாராட்டு



யாழ். பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கத்தில்
35 வருடங்கள் சேவையாற்றி
13 வருடங்கள் வர்த்தக
முகாமையாளர் பதவியை
வகித்து
ஓய்வுபெற்றுச் செல்லும்
**சின்னத்தம்பி அன்னராஜா**
அவர்களின் கூட்டுறவுச்
சேவையை மனமாரப் பாராட்டி நீடுழி வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். பல நோக்குக்
கூட்டுறவுச்சங்க ஊழியர்கள்.

(20923) (19-24-15-11)

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## நிறுவுநர் நினைவுநாளும் பரிசுத்தினமும்

காலம் - இன்று (2003.08.01) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு
நிகழ்விடம் - தம்பர் மண்டபம்
தலைமை - வண.செ.பி.நேசகுமார்
*(கல்லூரி பழைய மாணவனும், குருமுதல்வர் யாழ்ப்பாணம் அங்கிலிக்கன் திருச்சபை.)*
பிரதம விருந்தினர் - கலாநிதி ஆர்.ஸ்ரீகரன்
*மூத்த விரிவுரையாளர், இரசாயனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.*
பரிசில் வழங்கல் - திருமதி சுஜேந்தினி ஸ்ரீகரன்

*பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(C29238) (32-12-18-30) அதிபர், ஆசிரியர், மாணவர்.



# STUDY IN LONDON

B.Sc., M.Sc. & Ph.D
Computer Science, E-Commerce, information Technology, software Engineering, Accounting & Finance Arts, Biology & Many more

UK பிரதிநிதி தற்போது யாழ்ப்பாணத்தில் மாணவர்களை தகுதிகண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்றுக் கொடுக்கின்றார்.

Those who are waiting for A/L Results can Apply
Please call to book your Appointment
0777738013

இல: 06, இலந்தைக்குளம் றோட், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

University OF East London

(20937)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி செல்லத்துரை

சுன்னாகம் ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை அவர்கள் நேற்று (31.07.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் தங்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம், நாகம்மா ஆகியோரின் சகோதரனும் புவனேஸ்வரி, கந்தசாமி, பவளராணி, சரஸ்வதி, சிறீஸ்கந்தராசா (லண்டன்), ராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தையா, பரமேஸ்வரி, சந்திரசேகரம், தங்கராசா, மகாரஞ்சனி, நவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2003) வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயனார் கோவிலடி,*
*சுன்னாகம்.* (20948)

தகவல்:
கந்தசாமி (லாந்தா) *(மகன்)*

## அருணாசலம் வேலும்மயிலும் (செல்லப்பா)

யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, இமையாணன் வீரகத்திப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் வேலும்மயிலும் அவர்கள் நேற்று (31.07.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லாச்சியின் அன்புக் கணவரும் முருகையா, விநாயகமூர்த்தி, இராமலிங்கம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை மற்றும் தங்கவேலாயுதம் (கனடா), பரமேஸ்வரி, சிவபாதசுந்தரம் (ஓமான்), புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் வள்ளியம்மை, இராசநாயகம், தவதேவி, வீரவாகு ஆகியோரின் அன்பு மாமனாரும் கணேசமூர்த்தி (ஆஸ்திரேலியா), சத்தியமூர்த்தி (லண்டன்),விமலாதேவி (லண்டன்), சாந்தமூர்த்தி (லண்டன்), தயாபரன் (கனடா), பவானி (ஆஸ்திரேலியா), ரகுபரன் (அமெரிக்கா), கிருபரன் (கனடா), இராசலிங்கம், ஜெயமோகன், ஜெயகீதன், ஜெயராகன், அரவிந்தன், ஜெயந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆரணி, ஆர்த்தி, கிருஷாந், பிரஜீத், ஜனுசாந், அபிநயா, ஆரபி, அர்ஜுன், பிரவீன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2003)வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.4 மணிக்கு எல்லன் குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரகத்தி பிள்ளையார் கோயிலடி,*
*இமையாணன்,*
*உடுப்பிட்டி.* (C29242) (32)

தகவல்:
வே.தங்கவேலாயுதம்
(மகன்)

## ஆறுமுகம் நடராசா

இல.5, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடராசா அவர்கள் நேற்று (31.07.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்- கதிராசிப்பிள்ளை (சின்னம்மா) தம்பதியினரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், ஜெகதீஸ்வரி, தயாளினி, காந்தரூபன், தவரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2003) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 4 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 5, சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை.* (20947)(12-18)

தகவல்:
சு.கதிர்காமநாதன்
(நாதன்) மைத்துனர்.

## கல்விச் சுற்றுலா பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நாளை சனிக்கிழமை மேற்கொள்ளவிருந்த கல்விச் சுற்றுலா பிற்போடப்பட்டுள்ளது என்று கல்லூரி மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இக்கல்விச்சுற்றுலா எதிர்வரும் 6ஆம் திகதி காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் -

சுற்றுலாவில் பங்குபற்ற பதிவு செய்த மாணவர்களை இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் மாணவர் தலைவரைச் சந்திக்கும்படியும். மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ம-3)


**லஷ்சுமி சினிமா** இணுவில்
எம்.ஜி.ஆர், ராதாசலூஜா, அசோகன், மனோகர் நடித்த
இதயக்கனி
தினசரி: 11.00, 3.00, 7.00
(20939)

**நாகம்ஸ் சுன்னாகம்**
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம் (ரீலஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(C29232) (31-16-17)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
முரளி, தேவயானி நடித்த
காதலுடன் (ரீலஸ்)
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
BLUE STREAK
தினசரி 8.45 இரவு.
(C29213) (31-16-17)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (ரீலஸ்)
தினசரி: 10.30,2.30,6.30,9.30.
(C29233) (12-18-30)

**லிபேட்டி** அச்சுவேலி
சரத்குமார், தேவயானி, விவேக் நடித்த
தென்காசிப்பட்டணம் (ரீலஸ்)
தினசரி: 3.00, 7.00 மணி (புதிய நேரம்)
தினசரி காலை 11.00 மணிக்கு CROUCHING TIGER HIDDEN DRAGON
(C/29231) (18-12-30) சிறந்த கராட்டிச்சித்திரம.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



அமரர்
**தம்மையா இளையதம்பி**
மலர்வு: 24.03.1925
உதிர்வு: 02.07.2003
திதி: 01.08.2003

சொந்தங்கள் வேண்டாம் என்று
சொர்க்கலோகம் சென்றதுமேன்
சொல்லியழ யாருமில்லை-எம்
சோகங்கள் தீராதப்பா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இன்று (01. 08. 2003) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தற்காலிக முகவரி,*
*பொற்பதி றோட்,*
*நாமகள் லேன்,*
*கொக்குவில்.*

(20948)(18-12-30)

- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா சேனாதிராஜா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவரான சின்னையா சேனாதிராஜா (முன்னாள் வெள்ளவத்தை பிளாசா தியேட்டர் முகாமையாளர்) அவர்கள் நேற்று (31.07.2003) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு.திருமதி சின்னையா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி சபாபதி தம்பதிகளின் மருமகனும் இராசலட்சுமி அவர்களின் கணவரும் மங்கலேஸ்வரி (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, சிறிஸ்கந்தராஜா, சொர்ணேஸ்வரி (கனடா), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), விக்கினேஸ்வரராஜா (கனடா), சோமாஸ்கந்தராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவலிங்கம் (பிரான்ஸ்), பத்மநாதன், கலாதேவி, சுப்பிரமணியம் (கனடா), மனோகரன் (பிரான்ஸ்), சசிகலா (கனடா), சாந்தாதேவி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***64/4, Liyanake Road,***
***Dehiwala.***
***T.P.NO. 075 - 515126.*** (20934) (29-13-12-30)

*தகவல்:*
திருமதி சேனாதிராஜா

## செல்லப்பா மாணிக்கவாசகர்

### (மார்க்கண்டு)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா மாணிக்கவாசகர் நேற்று (31.07.2003) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-பர்வதம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், நவரத்தினம், நித்தியானந்தன், சிவானந்தன், செல்வரதி (ஜேர்மனி), செல்வவதனா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தயாநிதி, வசந்தகுமாரி (வசந்தநாகபூசணி அம்மன்- ஏழாலை), திருஞானேஸ்வரி, இரவீந்திரன் (ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (ப.நோ.கூ.ச.சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, நாகலிங்கம், அழகரத்தினம், ஐயாத்துரை, தம்பித்துரை ஆகியோரின் சகோதரரும், இராசரத்தினம் (சேனா), சபாரத்தினம், காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் அழகரத்தினம், விஜயரத்தினம், திருமதி நவமணி கனகலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரகாஷ், பிரதீபன், நளினி, பிரசன்னா, லக்ஷ்மன், ஜேர்மனியைச் சேர்ந்த நிவர்ணன், நிருசன், நிதர்சன் மற்றும் திலக்ஷனா, தர்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.08.2003) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (20945)(12-13-30)

தகவல்:
மா.இராசமணி
*(மனைவி)*

## சின்னத்துரை குமாரசாமி

### (இளைப்பாறிய முகாரி (போமன்), காங்கேசன்துறை சிமெந்துக்கூட்டுத்தாபனம்)

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை குமாரசாமி அவர்கள் நேற்று (31.07.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சின்னத்தங்கம் ஆகியோரின் மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை-விஜயரட்ணம் ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற கனகமணியின் அன்புக் கணவரும், அரவிந்தன் (நோர்வே), துஸ்யந்தன் (நோர்வே), அருள்செல்வன் (கனடா), பிரியகுமாரன் (திருகோணமலை), பிரியதர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் குணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், புஸ்பராணி (நோர்வே), ஸ்ரீ உமையாள் (நோர்வே), ராஜினி (கனடா), ஜீவராணி (திருகோணமலை) ஆகியோரின் மாமனாரும், அனிக்சன், கவித்திரா, அர்ஜுன், புருசோத், ரஜிவன், தனுமாறன், டிறோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மே.பா.அதிதீரன் மின்சார*
*தொழில்நுட்ப நிறுவனம்.*
*இல. 135, கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (20944) (12-13-30)

தகவல்:
பிரியதர்சன் (மகன்)

## சுப்பிரமணியம் அருளம்பலம்

அரியாலை சித்தி விநாயகர் கோவில் வடக்கு வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் அருளம்பலம் 30.07.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சந்திராவின் அன்புக் கணவரும் கணேசசங்கரலால், இராமகிருஷ்ணலால், பிரேமசந்திரலால், வாசுகி - பட்லர், சிவதவலால், முரளிதரலால், சிறிரங்கன் (கண்ணன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.07.2003) வியாழக்கிழமை புலோலியில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முல்லியன் தோட்டம்,*
*புலோலி- கிழக்கு,*
*பருத்தித்துறை.* (20942) (32-12-18-30)

தகவல்:
அ.கணேசசங்கரலால்.

## திருமதி சூசைப்பிள்ளை லூர்த்தம்மா

யாழ்ப்பாணம், 2ஆம் குறுக்கு வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சூசைப்பிள்ளை லூர்த்தம்மா நேற்று (31.07.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா இராசமணியின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரான்ஸ்லொஸ் (வெள்ளித்துரை - கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற றெஜீனா, புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும் மயில்வாகனம், ரத்னஜோதி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் டொனால்ட் சுதேஷ், பேனாட் ரமேஷ், மாலினி, நிருஷா, சர்மிளின், மடோனோ, தயாளினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (02.08.2003) சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லடக்கத்திற்காக யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*211, 2ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (20943) (32-12-18-30)

தகவல்:
மயில்வாகனம்
(மருமகன்)

## ஹெலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யம் செய்வதற்கு அரசு ஹெலி வசதிகளைச் செய்து கொடுத்திருந்தது.

இதனை வன்மையாகக் கண்டித்துள்ள சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிரிசேன நேற்று அது தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

"விடுதலைப் புலிகள் கடந்த ஏப்ரல் மாதமே பேச்சுக்களில் இருந்து விலகிவிட்டனர். இந்த நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக தமிழ்ச்செல்வனுக்கு ஹெலி வசதிகளைச் செய்து கொடுத்துள்ளதாக அரசு சொல்வதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தப் போக்குவரத்து வசதிகளைப் புலிகள் தமது தேவைகளுக்கே பயன்படுத்திக் கொள்கின்றார்கள்" - என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## குரங்குபாஞ்சான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக் குழு, விடுதலைப்புலிகளைக் கேட்டிருப்பது தெரிந்ததே.

ஆயினும், அந்த முகாம் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருப்பதால் அதனை அகற்ற முடியாது என்று தமிழ்ச்செல்வன் அறிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் தங்கியிருந்த தமிழ்ச்செல்வனிடம் குரங்குபாஞ்சான் முகாம் பற்றி வினவப்பட்டது. குரங்குபாஞ்சான் முகாமை அகற்ற வேண்டும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வலியுறுத்தி வருகின்றதே என்று வினவப்பட்ட போது, திருகோணமலைக்குச் சென்று பிராந்தியத் தளபதிகளிடம் பேசிய பின்னர் தான் கருத்துக் கூற முடியும் என்று அவர் பதிலளித்தார். (ம)


IIS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

காலம் : 16.08.2003
காலை 10.00 மணி

அனைத்து விதமான Diploma கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன.

புலமைப் பரிசில் திட்டத்தில் கல்வியாண்டு 2002/2003 இல் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இப்பிரிவில் இணைந்து கொள்ள முடியும்.

மேலதிக விபரங்கள்:
11.08.2003 திகதிய உதயனில்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.


## நெடுந்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்ணித்து வந்த பல நாடுகள் கூட தற்போது அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளமையை எமக்குக் கிடைத்த பெரிய வெற்றியாகவே நாம் கருதுகின்றோம்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசு அனுப்பிய வரைவை எமது சட்ட வல்லுநர்கள் ஆராய்கின்றனர். அந்த வல்லுநர்கள் வழங்கும் யோசனைகளுடன் விரைவில் அரசிற்கு எமது பதிலை நாம் அனுப்புவோம். அந்த யோசனையை ஏற்பதும் அதன் அடிப்படையில் பேச்சை மீள ஆரம்பிப்பதும் அரசின் பக்கத்திலேயே உள்ளது. இது விடயத்தில் அரசு எடுக்கும் முடிவே எதிர்கால செயற்பாடுகளைத் தீர்மானிக்கும்.

இன்றுள்ள நிலையில், எம்மைப் பலப்படுத்துவது என்பது பெரிய விவகாரமாகப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. எமது பலம்தான் இன்று நாம் பேச்சுக்குப் போவதற்குக் காரணமாக அமைந்தது. எமது பலத்தைத் தொடர்ந்து நாம் கட்டி வழர்க்க வேண்டும். நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் கூட, எமது பலத்தை நாம் பேணத்தான் வேண்டும். எல்லைக் கிராமங்களில் உள்ள மக்களைப் பாதுகாக்க அந்தப்பலமே தேவை.

-இப்படி அவர் கூறினார். (ம)

## இடைக்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் பிரதமர் கூறியிருக்கின்றார்.

பிரதமரும், அமைச்சர் பீரிஸ"ம் அளித்த விளக்கங்களை அடுத்து, யோசனைகள் அடங்கிய வரைவை அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

புலிகளுக்கு அனுப்பிய வரைவிலும் தனக்கு கையளிக்கப்பட்ட வரைவிலும் வேறுபாடுகள் இருக்கின்றன என்று ஜனாதிபதி முன்னர் கூறியிருந்த போதிலும், இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அது குறித்து கேள்வி எதுவும் எழுப்பவில்லை எனக் கூறப்படுகிறது. (ம)


A/L 2005
LOGIC
அனுமானம்
ஆரம்பம்:
சனி-காலை 7 மணி
எஸ். எஸ். மனோகரன்
BEACON
யாழ். (வெலிங்டன் சந்தி)
(20892)


# இந்திய மீனவர்கள் ஆக்கிரமிப்பை தடுக்க எமது மீனவர் சமூகம் ஒன்றுபடவேண்டும்

## சமாசப் பிரதிநிதி கலந்துரையாடலில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.1

இந்திய மீனவர்கள் குடாநாட்டு கடற்பரப்பை ஆக்கிரமித்து வளங்களை அழிப்பதைத் தடுப்பதற்கு எமது கடற்றொழிலாளர் சமூகம் ஒன்றுபட்டு நிற்பது அவசியம். நாம் ஒன்றுபட்டு போர்க்கொடி தூக்கினால் இந்திய மீனவர் வருகையைக் கட்டுப்படுத்த முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாச செயலாளர் சூரியகுமார்.

நேற்று மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற, மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் லேும் தெரிவித்ததாவது:-

இந்திய இழுவைப் படகுகள் மூலம் எமது கடல் வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு இலங்கைக் கடற்படையும் துணைபோகின்றது.இந்திய ரோலர்கள் எமது கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும் போது அவற்றை எம்மால் தடுத்து நிறுத்தி கரைக்கு கொண்டுவரும் சக்தி இருக்கிறது.

ஆனால், நாம் இந்திய மீனவர்களுக்கு ஏதும் செய்துவிட்டால் இலங்கை மீனவர்கள் பின்னணியில் வேறு ஒரு சக்தி செயற்படுகின்றது என்று தமிழக அரசு கூறுகின்றது.

எம்மக்கள் இடம்பெயர்ந்து தமிழக அகதி முகாம்களில் வாழ்கின்றனர். இந்திய மீனவர்களை நாம் ஏதாவது செய்தால் எமது உறவுகளுக்கு ஏதாவது நடந்துவிடும் என்ற அச்சமும் உள்ளது. இதனால், ஒன்றுமே செய்யமுடியாத நிலையில் நாம் கைகட்டிப் பார்த்தபடி உள்ளோம்.

பல கஷ்டங்கள், இடர்பாடுகளுக்கு மத்தியிலும் காலத்திற்கு காலம் நாம் தொழில் செய்து வருகின்றோம். தொழிலுக்குப் போனால் அனுமதி கேட்கவேண்டும். பெரிய மீன்களை கொண்டு வந்தால் கடற்படைக்கு வெட்டிக் காட்டவேண்டும். இப்படி எத்தனையோ கஷ்டங்கள் எமக்கு.

இந்திய மீனவர்களின் வருகையைத் தடுப்பதற்கு அரச அதிகாரிகளும் தமிழ் அமைச்சர்களும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. எனவே, மீனவர் சமூகம் இந்த விடயத்தில் ஒன்றுபட்டு நிற்பது மிக முக்கியமானது - என்றார்.

கலந்துரையாடலில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் பலரும் இந்திய மீனவர்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அதிகம் கவலை தெரிவித்தனர். அதனைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை அவசியம் என வலியுறுத்தினர்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் இனியவன், கடல்வள உயிரியல் திணைக்களத்தின் பணிப்பாளர், யாழ்.மாவட்ட மீனவர் சங்கத் தலைவர்கள், சமாசத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-ரி)

## ஆடிப்பூரம் நடத்த அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.1

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள வீமன்காமம் வீணியவரை அம்மன் ஆலயத்தில் இன்று ஆடிப்பூரத் திருவிழாவினை நடத்துவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக ஆலய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

ஆலயத்துக்குச் செல்ல விரும்பும் பக்தர்களுக்காக காலை 7.00 மணிக்கு தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் இருந்து வாகனங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)


SPOKEN ENGLISH
With
Grammar
LECTURES BY:
MR.M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்:
02.08.2003
சனி காலை 7மணி
SATURDAY SUNDAY } 7 a.m.-8 a.m.
HARY'S INSTITUTE
இல. 564.கஸ்தூரியார் வீதி.
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்)
(20906) யாழ்ப்பாணம். (12-13-18)


## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.1

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியின் யாழ்.மாவட்டப் பிரிவு அனுசரணையுடன் ஜப்பான் ஆசிய மருத்துவர் சங்கம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டு ஜப்பானிய மருத்துவர்களின் சேவையைப் பெறும்படி சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணி கேட்டுள்ளது. (ம)

## அமெ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹக்கீம் உறுதியாகக் கூறியிருக்கிறார்.

அரசு - புலிகள் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டுமென்றும், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஆலோசனைகளில் முஸ்லிம் தரப்பினரது ஆலோசனைகளும் சேர்க்கப்பட வேண்டும் என்றும் தூதுவர்களிடம் விளக்கியதாகவும் ஹசன் அலி தெரிவித்தார்.


இந்திய பரம்பரை ஜோதிடர்
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.
ஒவ்வொரு நாளும் சாத்திரம் சொல்லப்படும்
உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.
அம்மாவைச் சந்திக்கும் இடம்:-
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்,
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீமுருகன் ஜ"வல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.
(20545)(14-17)



முக்கிய அறிவித்தல்
Serendib Express Airlines

எமது நிறுவனத்தின் சகல விமான பயணச்சேவைகளும் 2 ஆம் திகதிமுதல் 6 ஆம் திகதிவரை தவிர்க்க முடியாத காரணத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எம் சேவையில் விமானப் பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொண்டவர்கள் பிரயாண மாற்று ஒழுங்குகளை செய்வதன் பொருட்டு எமது யாழ்ப்பாணக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

செரண்டிப் விமான சேவை
யாழ்ப்பாணக் காரியாலயம்,
இல.13, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு - 021 - 2223916
0777 - 714871

(சி-29226)(18-12-13)



தென்னிந்தியாவில் இருந்து

யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
கைரேகை மட்டும் 9 மணிமுதல் 2 மணிவரை.
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
காலை 9.00மணிமுதல் மாலை 6.00மணி வரை.

(24-15-19) ராஜகுருசாமி T.P. 5867
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.
(20718)





மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்களும்
உரிமையாளராக
HERO HONDA
World No.1
Two-Wheeler Company
2 Year warranty
விருப்பு வர்ணத்திற்கு முந்துங்கள்
RG
இரத்தினகோபால்ஸ்
63, 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 6185 0777 340056
(C/29234)
UTHAYAN Graphics





இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(28-14-16) (20854)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்தில் [illegible] பணிமனையில் 01.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.